பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 06 | வெள்ளிக்கிழமை 19.01.2018 | கதிர் 75

## பல்கலை சுற்றாடலில் நேற்றிரவு பதற்றம்

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் நேற்று இரவு 10 மணியளவில் பல்கலைக்கழகத்தின் இரு வருட மாணவர் அணிகளுக்கிடையில் வாக்குவாதமும் அதையடுத்துத் தள்ளுமுள்ளும் இடம்பெற்றன எனத் தெரியவருகிறது.

இதனையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது, பொலிஸார் சம்பவ பக்கம் 18

# பிணைமுறியில் சுருட்டப்பட்ட பணத்தை மீள அறவிட்டே தீருவாராம் ஜனாதிபதி!

### அவர் திட்ட வட்ட அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 19

"பிணைமுறி ஊழல் மூலம் சுருட்டப்பட்ட பணத்தை மீள அறவிட்டே தீருவேன். பணத்தைச் சுருட்டியோருக்கு உரிய தண்டனையும் பெற்றுக் கொடுப்பேன்."

– இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று முன்தினம் எல்பிட்டியவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே இந்த விடயத்தைத் திட்டவட்டமாக அறிவித்தார் அவர்.

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையிலும், பாரிய ஊழல் மோசடி, அரச வளங்கள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு பக்கம் 18



# இறைமையை பிரித்துக் கோரவில்லை பகிரவே கோருகிறோம்

## இ.போ.சபை - தனியார் பேருந்து நடத்துநர்கள் இடையே கைகலப்பு

### சாவகச்சேரியில் நேற்றுச் சம்பவம்

நேற்றுக் காலை 11 மணியளவில் வவுனியாவில் இருந்து யாழ். வந்த இ.போ.ச. பேருந்தும் கொடிகாமத்திலிருந்து – யாழ்ப்பாணம் நோக்கி சென்ற தனியார் பேருந்தும் சாவகச்சேரியில் சந்தித்த போது இதன் நடத்துநர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இரு பஸ்களும் மோதும் விதமாக விலகிச் சென்ற போதே நடத்துநர்களிடையே வாய்த் பக்கம் 18

## கூட்டமைப்பின் நிலைப்பாட்டை விளக்குகிறார் சுமந்திரன் எம்.பி.



### 'காலைக்கதிர்' ஆசிரியர் தலையங்கத்துக்கு அவர் பதில்

**"பிரிக்கப்பட்ட இறையாண்மையை நாம் கோரினால் அது நாட்டைப் பிரிக்கின்றோம் என அர்த்தப்படுத்தப்படலாம். அதனால்தான் நாம் பகிரப்படும் இறையாண்மையைக் கோருகின்றோம்."**

– இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

'காலைக்கதிர்' நாளிதழின் நேற்றைய ஆசிரிய தலையங்கத்தில் எழுப்பப்பட்ட வினாக்களுக்குத் தாம் வழங்கிய பதிலிலேயே அவர் இந்த விளக்கத்தைத் தந்திருக்கின்றார். (முழுமையான செய்தி 09 ஆம் பக்கத்தில்)

## முன்னாள் பிரதம நீதியரசருக்கு ஊழல் வழக்கில் அழைப்பாணை

### பதவியில் இருக்கும் நீதியரசர் ஒருவருக்கும் விடுக்கப்பட்டது

முன்னாள் பிரதம நீதியரசரும், முன்னாள் சட்டமா அதிபருமான மொஹான் பீரிஸ், தற்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ், மின்சார சக்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.எம்.சி.பெர்டினான்டோ ஆகிய மூவருக்கு எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு நீதிவான் நீதி பக்கம் 18

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கையின் போக்குக் குறித்து சீற்றம்



இனப்பிரச்சினையை ஒட்டி நிகழ்ந்த வன்முறைகள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுதல் மற்றும் மனித உரிமைகளை நிலைநிறுத்துதல் ஆகியன சம்பந்தமாக இலங்கை அரசு வழங்கிய பிரதான உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாமலேயே முடங்கிவிட்டன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது 2018ஆம் ஆண்டுக்கான உலக அறிக்கையில் நேற்று இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றது. பக்கம் 18

## கொடிகாமத்தில் துப்பாக்கி முனையில் கொள்ளையிட்ட இருவர் சிக்கினர்!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் துப்பாக்கி முனையில் பணக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் இருவரை கொடிகாமம் பொலிஸார் 24 மணி நேரத்தில் கைது செய்துள்ளனர்.

இந்தப் பகுதியில் இவர்கள் மறைந்திருந்தமை தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் புலனாய்வு அதிகாரி பக்கம் 18

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு மீள வலியுறுத்தியது ஐரோப்பிய ஒன்றியம்

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு இலங்கை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக வேண்டும்; சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டத்தினூடாக அது பதிலீடுசெய்யப்பட வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான இணை பக்கம் 18






அரசில் நடக்கும் பல விடயங்கள் தமக்கு முன்னரே தெரியப்படுத்தப்படுவதில்லை என்று கூறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவற்றில் பலவற்றைத் தாம் பத்திரிகைகளில் பார்த்தே அறிந்து கொள்ளுகின்றார் என்றும் கூறிவருகின்றார். பக்கம் 18

## கலைப்பீடத் தடை நீக்கப்பட்டும் கூட மாணவர்கள் விரிவுரைக்கு வரவில்லை

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புத்தடைகள் நேற்று நீக்கப்பட்டிருந்த போதிலும், நேற்று மாணவர்கள் எவரும் வகுப்புகளுக்குத் திரும்பவில்லை என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் தெரி பக்கம் 18

## நீர்வேலியில் கத்தி முனையில் 2 வீடுகளில் நேற்றுக் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கு இராசபாதை வீதியிலுள்ள இரண்டு வீடுகளில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் புகுந்த கொள்ளைக் கும்பல் கத்தி முனையில் நகைகள் மற்றும் பெறு மதியான பொருள்களைகொள்ளையிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளது.

ஒரு வீட்டினுள் புகுந்த பக்கம் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமருடன் பாகிஸ்தான் இராணுவத் தளபதி சந்திப்பு!





கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஜாவிட் பஜ்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரை தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு வந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி கடந்த செவ்வாய்க்கிழமை முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

நேற்றுமுன்தினம் காலை அவர், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, இலங்கைக்கு அவசரத் தேவைகளின் போது பாகிஸ்தான் உரிய நேரத்தில் அளித்து வரும் உதவிகளுக்கு ஜனாதிபதி மைத்திரி நன்றி தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், பாதுகாப்பு அமைச்சில், சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவையும், பாகிஸ்தான் இராணுவத் தளபதி சந்தித்து பேச்சு நடத்தினார்.

இரதரப்பு பாதுகாப்பு உறவுகள், ஒத்துழைப்புகளைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்புகளின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# வசதி அற்ற நிலையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் வடக்கு - கிழக்கு மாணவர்கள்

## வடக்கு ஆளுநர் குரே தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கிலே உள்ள பாடசாலைகளில் குறைபாடுகள் இருப்பினும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் படித்து பட்டம் பெற்ற பலர் தமது மக்களுக்கு சேவை செய்யாமல் வெளி இடங்களுக்குச் செல்கின்றனர் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சையில் 53 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதோடு, அதில் நான்கு மாணவர்கள் விசேட சித்தியும் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்காவின் பிரதான நகரமான கொழும்பில் உள்ள பாடசாலைகளில் வசதிகள் இருந்தும் அவர்களால் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியவில்லை.

வசதியான குடும்பத்தில் பிறந்த அனுர பண்டாரநாயக்க தலைமைத்துவ வழிகாட்டலுக்கு ஏற்ப அரசியலில் ஈடுபடவில்லை. படித்துப் பட்டம் பெற்ற போதும் அவர் பெற்ற பட்டம் கல்வி சமூகத்திற்கு ஏற்புடையதாக அமையவில்லை.

வட மாகாணத்தில் வசதிகள் குறைந்த நிலையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் கல்வி செயற்பாட்டைப் பாராட்டுகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கல்விக்கதிர்

## தரம் 5 புலமைப் பரிசில் வினாத் தாள்களின் விடைகள்

**பிரபல ஆசிரியர் தயாரித்து கடந்த 14,15,16 ஆம் திகதிகளில் வெளியான வினாத்தாள் - 04 இன் பகுதி-I மற்றும் பகுதி- II இதற்கான விடைகள் வருமாறு:-**

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| 01 - 2 | 11 - 3 | 21 -3 | 31 - 3 |
| 02 -2 | 12 - 2 | 22 -2 | 32 - 2 |
| 03 - 3 | 13 - 2 | 23 - 1 | 33 - 1 |
| 04 - 2 | 14 - 1 | 24 - 3 | 34 - 2 |
| 05 - 1 | 15 - 3 | 25 - 3 | 35 - 2 |
| 06 - 3 | 16 - 1 | 26 - 3 | 36 - 3 |
| 07 - 2 | 17 - 2 | 27 - 1 | 37 - 3 |
| 08 - 2 | 18 - 1 | 28 - 1 | 38 - 1 |
| 09 - 3 | 19 - 1 | 29 - 2 | 39 - 2 |
| 10 - 1 | 20 - 2 | 30 - 3 | 40 - 3 |

### வினாத்தாள் - II

**01**
1. சுத்தம்
2. கந்தையானாலும் கசக்கியுடு
3. மேனி
4. சோம்பல்
5. தீய
6. சொன்னேன்
7. சுகம்+அழிக்கும்
8. ஓட்டித்
9. அம்மா

**02.**அ)
1. கைம்மாறு
2. கோடரி
3. தேநீர்

ஆ.
1. சகபாடி
2. பாலைவனம்
3. ஊதாரி
4. நாத்திகன்

**03**
1. தயவு செய்து விரைவு படுத்துங்கள்
2. நாங்கள் செல்வோம்
3. நான் வீட்டிற்கு செல்லலாமா?
4. Please tri to be cleach
5. 1) lightning 2) medicine
6. அம்மே கெட்ட ஸ்கோல நிவாடு
7 விலையைக் குறைக்க முடியாதா?
8.
1. மாதங்க
2. விளம்பரப் பகுதி
3. அந்திராக்ஸ்

**09.** பவளக் கொடியே சாய்ந்தாடு
**10.** நைட்டிங் கேள்
**11.** கற்க கசடறக்
**12.** 1. சமீபம்
2. அன்பு
3. அழகு

**13.** ஆத்திர மூடப்பட்டமை தான்

**14.** தொடர்கள்

**15.** பணிகளைச்
**16.** 1)சிகிரியாவைச் சென்று பார்த்த போது பெரிய சிங்கம் ஒன்று படுத்திருப்பது போல் காட்சியளித்தது.
2) சிகிரியாக் குகையில் உலகமே வியக்கும் வண்ண ஓவியங்கள் காணப்பட்டன.
3) அதனைச் சுற்றி அழிவடைந்த நிலையில் குளங்கள், குட்டைகள், அகழிகள் பல காணப்பட்டன.
**17.** 1) 5
2) 6000
**18.** 6174
**19.** 263
**20.** 4098,4100
**21.** 1)1025, 273
2) 959, 273
**22.** 1) 2 2) 3
**23.** 1) கூம்பகம் 2)4
**24.** இருபதாயிரத்து எழுபது
**25.** பி.ப. 2.25
**26.** 126
**27.** $2\frac{2}{12}$
**28.** 2l . 500 ml
**29.** $\frac{1}{9}$
**30.** 42cm 6mm

| | | |
|---|---|---|
| 31.1 | 41.2 | 51.4 |
| 32.1 | 42.1 | 52.3 |
| 33.4 | 43.1 | 53.3 |
| 34.3 | 44.4 | 54.4 |
| 35.2 | 45.3 | 55.3 |
| 36.2 | 46.3 | 56.1 |
| 37.1 | 47.2 | 57.1 |
| 38.1 | 48.3 | 58.4 |
| 39.4 | 49.4 | 59.2 |
| 40.2 | 50.1 | 60.1 |

# காணாமற்போனோர் தொடர்பான வழக்கு 22 வருடத்தின்பின் யாழ்.மேல் நீதிமன்றில்!




யாழ்ப்பாணம், ஜன. 19

1996 ஆம் ஆண்டு காணாமற் போனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்.நாவற்குழி பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமலாக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் அப்போது நாவற்குழி பகுதிக்கு பொறுப்பாகவிருந்த தளபதியை நீதிமன்றில் ஆஜராகுமாறு யாழ் மேல் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு நாவற்குழி படைமுகாமில் இராணுவத்தளபதியாக இருந்த துமிந்த கெப்பிட்டி வெலான தலைமையிலான படையினர் கைது செய்து கொண்டு சென்ற இருபத்து நான்கு இளைஞர்களும் பின்னர் காணாமல்போயிருந்தனர்.

தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் சட்டத் தரணிகளான கு. குருபரன் மற்றும் எஸ்.சுபாசினி ஆகியோர் ஊடாக யாழ்.மேல்நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் முதலாம் எதிரியாக துமிந்த கெப்பிட்டி வெலானவும், 2 ஆம் எதிரியாக இலங்கை இராணுவ தளபதி மற்றும் 3ஆம் எதிரியாக சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், இந்த வழக்கு நேற்று யாழ்.மேல்நீதிமன்றில் நீதி பதி மா.இளஞ் செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எதிரிகள் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் இரண்டு வழக்கறிஞர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதற்கு வழக்குத்தொடுனர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு தமது வாதங்களை முன்வைத்தார் அத்துடன் சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் நாவற்குழி தளபதியாக இருந்த துமிந்த கெப்பிட்டி வெலான தற்போதும் இராணுவ சேவையில் இருக்கிறார் எனச்சுட்டிக்காட்டினார்.

வழக்கை விசாரித்த நீதிபதி மா.இளஞ்செழியன் இந்த வழக்கின் முதலாம் எதிரியான இந்த இராணுவத் தளபதி துமிந்த கெப்பிட்டி வெலானவை எதிர்வரும் நான்காம் மாதம் இரண்டாம் திகதி மன்றில் ஆஜராகுமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத் தரணிகளுக்கு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைகளை அழிக்க உத்தரவு

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் மீட்கப்பட்ட சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளை அழிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நந்திக்கடல் பகுதியில் கடந்த இரண்டு நாள்கள் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது சுமார் ஐந்துலட்சம்ரூபாபெறுமதியானகூட்டுவலைகள்முக்கூட்டு வலைகள், தங்கூசி வலைகள் என்பன மீட்க்கப்பட்டன.

இது தொடர்பில் வழக்குப்பதிவு செய்த மாவட்ட மீன்பிடிப் பரிசோதகர் இந்த சான்றுப்பொருள்கள் தொடர்பான வழக்கை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் தாக்கல் செய்திருந்தார். நீதிவான் இச் சான்றுப் பொருள்களை அழிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

# பாரம்பரிய அரசியல்வாதிகளிடமிருந்து யதார்த்தவாதிகளிடம் தலைமை மாறும்

## ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் பாரியதொரு மாற்றத்தைக் கொண்டுவருவதாக அமையும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

வடக்கு, கிழக்கு பகுதிகளில்வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பாரம்பரிய தலைமைகளிலிருந்து மாறி யதார்த்தவாதிகளிடம் தமது அரசியல் தலைமைத்துவத்தை அவர்கள் ஒப்படைப்பார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

பாரம்பரிய கொள்கைகளுடன் இருக்கும் கட்சிகள் ஏமாற்றுக் கட்சிகள் என்று மக்கள் இன்று அறிந்து கொண்டுள்ளனர். அந்தவகையில் தாம் எதிர்க்கட்சி என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றி ஆளும் கட்சியில் இருக்கும் தரப்பினரது சுயநலத் தன்மைகளை மக்கள் புரிந்துள்ளனர்.

'பல நாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான்' என்பதற்கு அமைவாக இன்று அவர்களது உண்மை முகங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. அவர்களது கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் மக்கள் நலன் சார்ந்தவையாக இல்லை. இன்று மக்களிடம் முகமூடிக் கொள்ளையர்களாக அவர்கள் வாக்குகளைக் கேட்கத் தயாராகியுள்ளனர்.

ஊடகங்கள் செய்திகளை வெளியிடும்போது ஊடக தர்மத்துக்கு அமைவாக செயற்பட வேண்டும். எமது கட்சி மீது திட்டமிட்ட வகையில் சிலர் சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமையை நாம் கண்டிக்கிறோம் –

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல கொலைகள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்ற உண்மை நிலை இப்போது வெளிக்கொண்டுவரப் பட்டுள்ள நிலையில் இதில் யார் குற்றவாளிகள் என்பதை வரலாறு நிரூபித்துவருகின்றது.

இதேபோன்று பிணை முறி விவகாரம் தொடர்பில் தவறிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே –

எம்மிடம் நம்பிக்கை மட்டுமன்றி யதார்த்தமான வழிமுறைத் தீர்வுத் திட்டமும் இருக்கிறது . அது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து அதிலிருந்து கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே எமது கட்சி நிலைப்பாடு. அதில் ஒருபோதும் மாற்றம் கிடையாது. – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எமது வெற்றி உறுதி என்பதால் வாக்குறுதிகளை நிறைவு செய்வோம்!

## அங்கஜன் எம்.பி. நம்பிக்கை தெரிவிப்பு

எமது பிரதேச வேட்பாளர்களின் வெற்றி இப்பொழுதே உறுதி செய்யப்பட்டு விட்டதெனவும் நீங்கள் அளிக்கும் வாக்குகள் எமது வாக்குறுதிகளை மேலும் உறுதியாக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

வலி தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுதுமலை பிரதேசத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதேச செயற்பாட்டு அலுவலகத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் வலி தென்மேற்கு பிரதேச சபையில் கை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பொதுமக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். அங்கு அங்கஜன் இராமநாதன் மேலும் கூறியவை வருமாறு:–

'யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு உங்களின் எதிர்காலம் பொருளாதார ரீதியாகவும் பிரதேச ரீதியாக முன்செல்ல வாக்களியுங்கள்.

உங்கள் பிரதேசத்தில் கை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆணை வழங்குங்கள். உங்கள் வாழ்வு வளமாவதோடு, அபிவிருத்தியடைந்த நாடாக நாம் மிளிர முடியும். – என்றார். (உ)

# முன்னைய நீதித்துறை குறித்து ஜனாதிபதி வெளியிட்ட இரகசியம்

இலங்கையின் நீதித்துறையில் முன்னர் நிலவிய சுயாதீனத்தன்மை குறித்த இரகசியத் தகவல் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ளார். எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார்.

அங்கு இவ்விடயம் தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:–

நான் இதுவரை வெளியிடாத ஒரு விடயத்தைப் பற்றி அம்பலப்படுத்தப் போகின்றேன். ஊடகங்களுக்கும் என்னை பற்றிய புதிய விடயங்கள் அவசியமாக உள்ளன என்பதனால் இதனைக் கூறுகின்றேன்.

நீதிமன்றத்தின் சுயாதீன தன்மை குறித்து பேசும்போது எனக்கு இந்த விடயம் நினைவுக்கு வந்தது.

நான் அதிகாரத்திற்கு வந்த அடுத்த நாள் – 2015 ஜனவரி – 10ஆம் திகதி நள்ளிரவில் என்னைத் தேடி இருவர் வந்தனர். அவர்கள் அந்த காலப்பகுதியில் நீதிமன்றத்தின் உயர் பதவியில் இருந்த முக்கியஸ்தர் மற்றும் அவரது மனைவி ஆகியோராவர். தன்னைப் பதவியில் இருந்து நீக்க வேண்டாம் என்றும் தன்னை பதவியில் தொடர்ந்து வைத்திருங்கள் என்றும் அந்த முக்கியஸ்தர் என்னிடம் கூறினார்.

எனினும், நான் ஜனாதிபதியாகி அப்போது 24 மணித்தியாலங்கள் கூட நிறைவடையவில்லை. அதற்குள் இதனை பற்றி பேச வேண்டியதில்லை. பிறகு பார்ப்போம் என நான் கூறி அவர்களை அனுப்பி வைத்தேன்.

அடுத்த நாள் நள்ளிரவும் இந்த இருவர் என்னைத் தேடி வந்தனர். "ஜனாதிபதிக்கு எப்படி தீர்ப்பு வழங்க வேண்டுமோ அப்படியான தீர்ப்புகளை வழங்குகின்றேன். என்னைப் பதவியில் இருந்து நீக்க வேண்டாம். இன்னும் ஒரு வருடமாவது பதவியில் நீடிக்க அனுமதிக்க வேண்டும்" – என அந்த முக்கியஸ்தர் கூறினார்.

"எனக்கு இவ்வாறான அனுபவங்கள் இல்லை. இவை குறித்துப் பேச நான் விரும்பவும் இல்லை. நான் இதற்கு முன்னர் பிரதமர் அல்லது எதிர்க்கட்சி தலைவராகச் செயற்பட்டவன் அல்லன்" – எனக் கூறி அவரை அனுப்பி வைத்தேன்.

மூன்றாவது நாளும் என்னைத் தேடி அவர்கள் வந்தனர். இந்த முறை எனக்குக் கோபம் வந்துவிட்டது. "இனிமேல் என்னைப் பார்க்க வரவேண்டாம். அந்தப் பதவி தொடர்பில் நாங்கள் தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளோம். எனவே இனிமேல் தேடி வராதீர்கள்!" – எனக் கூறி அனுப்பி விட்டேன். – என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் படத்துடனான விளம்பரப் பதாகை எரிப்பு

## புதுக்குடியிருப்பில் புதனிரவு சம்பவம்



முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர் அலுவலகம் ஒன்றில் காணப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப்படம் தாங்கிய விளம்பர பதாகை அடையாளம் தெரியாத நபர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு 9 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள வேட்பாளரின் அலு வலகத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தபால் மூல வாக்களிப்பு 22ஆம் திகதி ஆரம்பம்

தபால்மூல வாக்குப்பதிவுகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தபால்மூல வாக்குப்பதிவுக்கான வாக்குச் சீட்டுக்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், எதிர்வரும் 22ஆம், 25ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்குபதிவு இடம்பெற உள்ளது.

இந்தத் தினங்களில் தபால்மூல வாக்கைப் பதிவு செய்யாதவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில், வாக்குப்பதிவை மேற்கொள்ள மீளச் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# தனியார் துறையில் மட்டும் 4 லட்சம் வெற்றிடங்களாம்!

## புள்ளி விவரத் திணைக்களம் மதிப்பீடு

நாட்டின்தொழில்துறையின் தேவைகளுக்கு அமைய பல்கலைக்கழக பாட நெறிகளை அறிமுகப்படுத்துவதற்கும் வேலைவாய்ப்புக்களை அடையாளம் காண்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில்முதன்முதலாக நடத்தப்பட்ட தொழில் கேள்விதொடர்பானகணக்கெடுப்பில் தனியார்துறையில் மட்டும் சுமார் 4 லட்சத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இருக்கின்றன என புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொகை மதிப்பு புள்ளி விவரதிணைக்களம்கடந்த ஆண்டு இறுதியில் நடத்திய – நாடு தழுவிய ரீதியிலான – கணக்கெடுப்பில் இந்த விவரங்கள் பதிவாகியுள்ளன.

இக் கணக்கெடுப்பின் போது 3500 தனியார் நிறுவனங்களிடம் இருந்து தகவல் திரட்டப்பட்டதாகவும் அதில் 4 லட்சத்து 97 ஆயிரத்து 302 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது தனியார் துறையில் சகல தரங்களிலும் ஏறத்தாழ 50 லட்சம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். பல்வேறு துறைகளில் 5 லட்சம் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்கின்றன அந்தப் புள்ளி விவரங்கள்.

அதிக எண்ணிக்கையில் வெற்றிடங்கள் தையலுடன் தொடர்பான துறையிலும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் துறையிலும் காணப்படுகின்றன.

இவற்றை தவிர இயந்திர பொறியியலாளர், கணக்கியல், தொழில்நுட்பவியலாளர் தொடர்பான உயர்தொழில்துறைகளிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என அது கணக்கெடுப்பின் போது தெரியவந்துள்ளது.

# மின் ஊழியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

மின்சார சபை ஊழியர்கள் நேற்று முன்தினம் இரவு முதல் திடீரென முன்னெடுத்திருந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளருடன் நேற்றுமாலை இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து மின்சார சபை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கை கைவிட்டுள்ளனர் என இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் தெரிவித்தார்.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நல்லாட்சி அரசுத் தரப்புக்கு சம்பந்தனின் எச்சரிக்கை!

நிதானமான தலைவர், மூத்த நாடாளுமன்ற உறுப்பினர், பழுத்த அரசியல் அனுபவசாலி, இலகுவில் உணர்ச்சி வசப்படாதவர் என்றெல்லாம் மதிக்கப்படுபவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

ஆனால், தேர்தல் என்று வந்ததும் அவரும் கூட அரசியல் உசுப்பேத்தல் பேச்சு பேச வேண்டியிருக்கின்றது என்பதுதான் நமது அரசியல் நிலைவரமாக உள்ளது.

திருகோணமலை நகரசபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அபயபுர வட்டார வேட்பாளரை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையின் தொனி அப்படித் தான் இருக்கின்றது.

*"ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தின்படி எமக்கு சுயாட்சி உரித்து உண்டு. அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும். நாம் தற்போது நிதானமாக, நேர்மையாக, ஒருமித்த நாட்டுக்குள் நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றோம். அது நடைபெறாவிட்டால், எமது ஆதரவை விலக்கி, நடைபெறும் ஆட்சியை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்."* - என்று தற்போதைய நல்லாட்சி அரசுக்கு எச்சரிக்கையும் சவாலும் விடுக்கும் விதத்தில் அவர் உரையாற்றியிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

ஏதோ, இந்த நல்லாட்சி அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவில் நடப்பது போலவும் -

கூட்டமைப்பு ஒரு தீர்மானம் எடுத்தால் இந்த அரசு கவிழ்ந்து விடும் என்பது போலவும் -

மூத்த தலைவர் சம்பந்தன் உரையாற்றியிருக்கின்றமை அதிகப்பிரசிங்கித்தனம் போலவே படுகின்றது.

இந்த நாட்டில் பௌத்த, சிங்கள மேலாதிக்க போக்கில் ஆட்சியை நடத்திய மஹிந்த ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்பியதில் தமிழரின் - தமிழ்க் கூட்டமைப்பின் - பங்களிப்பு கணிசமாக இருந்தது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான அரசியல் சக்திகளை ஒன்று திரட்டி, சிறுபான்மைத் தரப்புகளை அவருக்கு எதிராக நிலை நிறுத்தி, இராணுவப் பின்னாதிக்க வலிமையுடன் ஸ்திரம் பெற்று பலத்துடன் நின்ற அவரது ஆட்சியை மண் கவ்வச் செய்ததில் தமிழர் தரப்புக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பிரதான பங்கிருந்தது என்பது உண்மைதான்.

மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு மாற்றாக, நல்லாட்சி அரசை - அதீத பலத்துடன் - தேவைப்பட்டால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைத் திரட்டக் கூடிய வலிமையுடன் - அதிகாரத்துக்குக் கொண்டு வந்ததிலும் தமிழருக்கும், அவர்தம் பிரதிநிதிகளான கூட்டமைப்பினருக்கும், அந்தக் கூட்டமைப்பினருக்குத் தலைமை தாங்கும் சம்பந்தனுக்கும் கணிசமான பங்களிப்பு உரிமை உண்டு என்பதும் வாஸ்தவம் தான்.

இவையெல்லாம் எவராலும் மறுக்கப்பட முடியாதவைதான்.

ஆனால், அதன் அர்த்தம், கூட்டமைப்பு நினைக்கும் போது இந்த நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பி விட முடியும் என்பதல்ல. அவ்வாறு செய்யும் அதிகாரம் கூட்டமைப்புக்கு இருப்பது போன்று சம்பந்தன் பேசுகின்றமை, அரசியல் கயிறு திரித்தலேயன்றி வேறில்லை.

மாறாக, தமிழ்க் கூட்டமைப்புடன், இந்த நல்லாட்சி அரசு முரண்பட்டு நிற்கின்றது என்ற நிலைமை வந்தாலே, தெற்கில் நல்லாட்சி அரசின் பலம் கூடிவிடும் என்பதுதான் யதார்த்த நிலைமை.

தமிழர் தரப்புடன் நல்லாட்சி அரசு இணங்கிப் போகின்றது என்ற வாதத்தை வைத்துத்தான் இப்போது இந்த அரசைப் பலவீனப்படுத்தும் தனது பிரசாரத்தை மஹிந்த தரப்பு முன்னெடுக்கின்றது என்பது மறைக்கப்படக் கூடியதல்ல.

ஐ.தே.க. - சு.க. சேர்ந்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமைத்திருக்கும் இந்த அரசு நின்று, நிலைத்து, ஆட்சியைத் தொடருவதற்கு தமிழர் தரப்பின் ஆதரவு கட்டாயமானது - அவசியமானது - என்ற நிலைமையே இல்லை.

அந்தச் சூழ்நிலையில், எமக்கு அதிருப்தி வருமானால் இந்த அரசின் ஆட்சியை நிறுத்த வேண்டி வரும் என்ற சாரப்பட சம்பந்தன் ஐயா பேசுகின்றமை தேர்தல் கால 'ஸ்டண்ட்' அன்றி வேறில்லை.

2016 இல் தீர்வு, அதன் பின்னர் 2017 இல் தீர்வு என்றெல்லாம் நம்பிக்கொண்டிருந்த சம்பந்தன் ஐயா, இப்போது 2018 ஆம் ஆண்டு பிறந்த பின்னர், தீர்வைத் தராவிட்டால் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டிய நிலைமை வரும் என்ற சாரப்பட பேசத் தொடங்கியிருக்கின்றார் என்றால், வரக்கூடிய தீர்வு விடயத்தில் அவரது நம்பிக்கை எந்த நிலைமையில் இருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

'நம்ப நட, நம்பி நடவாதே!' - என்று கூறுவார்கள். அது அரசியலுக்கும் கூடப் பொருந்தும் போல.

நாம் - தமிழர்கள் - நம்பவும் நடந்தோம்; நம்பியும் நடந்தோம். அதனால்தான் இந்த நிலைமை போலும்.

அந்த ஏமாற்றத்தின் விளைவை வெளிப்படுத்தாமல், தமது எரிச்சலை இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டி வரும் என்ற எச்சரிக்கை மூலம் சம்பந்தன் ஐயா வெளிப்படுத்துகிறார் போலும்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்கள் 29 இற்கு முன் சொத்து விவரம் தரவேண்டும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 19

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை வெளியிட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக தேர்தலில் போட்டியிடுளம் கட்சியின் செயலாளர்களுக்கு நேற்று முன்தினம் கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சில வேட்பாளர்கள் இது வரையில் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இடம் பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் 57 ஆயிரத்து 252 பேர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம்!

கொழும்பு, ஜன. 19

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மிகவும் சிக்கலான நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சர் தலதா அத்துகோரலவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணை பேச்சாளருமான கயந்த கணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதன்படி, மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாமின் மூலம் வழக்குகளை விசாரிக்கக் கூடிய மேல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்படும்.

இதற்காக சட்ட வரைஞர் திணைக்களம் பிரேரணையை உருவாக்கியுள்ளதாகவும் குறித்த பிரேரணை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வலுவான சக்தியாக மாறியுள்ளது சிறிய, நடுத்தர தொழில் முயற்சி

விரைவான பூகோளமயமாக்கலுக்கு அமைய சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் வளர்ச்சி வலுவான சக்தியாக மாறியுள்ளது என்று கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதற்காகத் தேசிய செயற்றிட்டத்தைத் தயாரித்து பூகோள சந்தையை வெற்றி கொள்வது இலக்காகும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிய மற்றும் நடுத்தர அளவிலும் நுண்நிதித்துறையிலும் பத்து தொழில் முயற்சியாளர்கள் நாட்டில் உள்ளார்கள்.

நாட்டிலுள்ள இந்த முயற்சியாளர்கள் 45 சதவீத தொழில் வாய்ப்புக்களை வழங்கியிருக்கிறார்கள். மொத்தத் தேசிய உற்பத்திக்கு இவர்களே 52 சதவீதமான ஒத்துழைப்பை வழங்குகின்றார்கள் என்றும்



அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கைக்கு விஜயம் செய்தார் நேபாள இராணுவத் தளபதி சேத்ரி!

கொழும்பு, ஜன. 19

இலங்கையின் அழைப்பை ஏற்று நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் ராஜேந்திர சேத்ரி அவரது பாரியார் மற்றும் பத்து இராணுவப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவினர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இன்று வந்தடைந்த நேபாள இராணுவத் தளபதியை இலங்கை இராணுவ பதவிநிலை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர விமான நிலையத்தில் வரவேற்றனர்.

நேபால் இராணுவத் தளபதியின் விஜயத்தில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புத்தலைமை அதிகாரி மற்றும் முப்படை தளபதிகள் ஆகியோருடனான சந்திப்புக்கள் இடம் பெறவுள்ளன.

இந்த விஜயத்தில் நேபாள இராணுவத் தளபதியின் பாரியாரான திருமதி ரீடா சேத்ரி, நேபாள இராணுவ உயரதிகாரிகளான மேஜர் ஜெனரல் இஷ்வர் ஹமால், பிரதி இராணுவ உதவியாளர் கேணல் அனூப் ஜங்தப்பா, லெப்டினென்ட் கேர்னல் ராஜாராம் பேட்நெட், பதவி நிலை அதிகாரிகள், லெப்டினென்ட் ஸ்ரீயா ரேயமஜி ஏ.டி.சி, ஆணைச்சீட்டு உத்தி யோகத்தர் டிடி, பிரிந்த தாபா உள்ளிட்டோரும் வருகைதந்துள்ளனர்.

# சட்டவிரோத மீன்பிடி; 9 மீனவர்கள் கைது!

கொழும்பு, ஜன. 19

சட்டவிரோதமான வலைகளைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 9 மீனவர்கள் நச்சிக்குடா மற்றும் பேசாலை கடல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வட மத்திய கடற்படை கட்டளையின் கடற்படை வீரர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீன்பிடிக்க பயன்படுத்திய இரண்டு படகுகள், ஒரு வள்ளம், 3 சட்டவிரோத வலைகள் உள்ளிட்ட மீன்பிடி பொருள்கள்கைப் பற்றப்பட்டுள்ளன.

இந்த சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், வலைகள் என்பனவும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## நாளை

20.01.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : சதயம் பி.இ. 4.08 வரை
திதி : திருதியை பி.ப.12.56 வரை
சுபநேரம் : 3.35 – 5.05
இராகுகாலம்: 9.35 – 11.05

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பங்கள்: முல்லை, கிளிநொச்சியில் குறைவான எண்ணிக்கை!

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு, முல்லைத்தீவு, கிளி நொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்தே, குறைந்தளவினலான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்காளர்கள் பற்றி அவர் தகவல்களை வெளியிடும்போது- உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு, 6லட்சத்து ஆயிரம் அரச பணியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில், 41ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

தவறான முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் பெரும்பாலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. சில விண்ணப்பங்கள் தாமதமாக கிடைத்ததாலும் நிராகரிக்கப்பட்டன.

5 லட்சத்து 60 ஆயிரத்து 120 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபட்டுள்ளன. குருநாகல மாவட்டத்தில் இருந்து அதிகபட்சமாக 67 ஆயிரத்து 411 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன.



அதையடுத்து கண்டி மாவடத்தில் இருந்து, 48 ஆயிரத்து 353 விண்ணப்பங்களும், அனுராதபுர மாவட்டத்தில் இருந்து, 45 ஆயிரத்து 261 விண்ணப்பங்களும், கம்பகா மாவட்டத்தில் இருந்து, 41 ஆயிரத்து 49 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.

தபால் மூல வாக்களிப்புக்கான குறைந்தபட்ச விண்ணப்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அனுப்பப்பட்டன. அங்கிருந்து, ஆயிரத்து 558 விண்ணப்பங்களும், அதையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 208 விண்ணப்பங்களும் கிடைத்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## பெரும்பாலான மாகாணங்களில் சீரான காலநிலை நிலவுகிறது!

கொழும்பு, ஜன. 19

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் சீரான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் இரவு மற்றும் காலை வேளைகளில் குளிரான காலநிலை நிலவும்.

நுவரொலியா மாவட்டத்தின் சில பகுதிகளில் உறைபனி நிலவக்கூடும் என்று திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஊவா , வடமேற்கு மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை, அம்பாறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் 40 கிலோமீற்றருக்கும் அதிகமான வேகத்தில் காற்றுவீசக்கூடும்.

நாட்டின் சில பகுதிகளில் பனியுடன் கூடிய காலநிலை நிலவும் என்று திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தப்பி ஓடிய இராணுவத்தினரை மடக்கிப் பிடிக்கத் தீவிர முயற்சி!

கொழும்பு, ஜன. 19

இலங்கையின் பாதுகாப்புத் தரப்பிலிருந்து தப்பிச்சென்ற பத்தாயிரம் பேர் வரையில் இதுவரை மீண்டும் சரணடையவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்த தகவலை இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேற்படி தப்பிச் சென்ற நபர்கள் உரிய முறையில் விடுமுறை பெற்றுக்கொள்ளாதவர்கள் என்றும் உரிய முறையில் சேவையிலிருந்து விலகிக்கொள்ளாதவர்கள் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் சில நபர்கள் நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள்.

உரிய முறையில் அனுமதியின்றிப் படைகளிலிருந்து விலகிச் சென்றவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கடந்த காலங்களில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற நபர்களுக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வரையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அந்தக் காலத்தில் பணிக்குத் திரும்புமாறு பணிக்கப் பட்டிருந்தது.

ஆனாலும் அந்தக் காலத்தில் 11 ஆயிரத்து 232 அதிகாரிகள், படையினர் உள்ளிட்டவர்கள் மட்டுமே சரணடைந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 . 04 . 1926



மறைவு
19 . 01 . 1993

## அமரர் இ.ச.பேரம்பலம்

E.S.P நிறுவன ஸ்தாபகர்
[வாரிவளவு, காரைநகர்]

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய் இனிய அறிவுரைகள் கூறி
ஈடேற வணிகத்தில் வழிகள் பலகாட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்!
எண்ணிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர்! எம்மையெல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எம் வாழ்வுமலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய பாடல் கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைத்த
தெய்வமே! எங்கள் அன்புத் தந்தையே!
எம்மை விட்டு விண்ணுலகு சென்று
ஆண்டுகள் இருபத்தைந்து அகன்றிட்ட போதும்
மறக்குமா எம் நெஞ்சம்? என்றென்றும்
உம் நினைவில் வாழும்...

E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்
மணிஓசை
383, கோயில் வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் காத்தான்குடி விஜயம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமையும்

காத்தான்குடி,ஜன.19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இந்த மாதம் 31ஆம் திகதி காத்தான்குடிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளநிலையில், அவரது விஜயத்தின் போது நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டம் அதிகளவான முஸ்லிம்கள் பங்கேற்ற கூட்டமாக வரலாற்றில் பதிவாகும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.


ஹிஸ்புல்லாஹ் பெருமிதம்

காத்தான்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன காத்தான்குடிக்கு வருகைதரவுள்ளார். பி.ப. 4 மணிக்கு பிரதான கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் அதிகளவான முஸ்லிம்கள் பங்கேற்ற கூட்டமாக வரலாற்றில் பதிவாகும் என நம்புகின்றோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவை முஸ்லிம்கள் எதிர்த்தனர். அவ்வாறான நிலையில் அவர் காத்தான்குடிக்கு வந்த போது அவரது கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் வந்தனர். பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நான் காரில் செல்லும் போது அவர் தனக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு என்ற உணர்வையே மறந்து என்னுடன் பல விடயங்களைக் கூறினார்.

அந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருப்பாரானால் முஸ்லிம்கள் தொடர்பில் அவர் வைத்துள்ள தப்பான அபிப்பிராயத்தைக் காத்தான்குடி கூட்டம் இல்லாமல் ஆக்கியிருக்கும்.

தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காத்தான்குடிக்கு வருகைதரவுள்ளார். சிறுபான்மை மக்கள் மத்தியில் இவருக்கு நல்ல செல்வாக்கு உள்ளது. அவரை ஆட்சியில் அமர்த்தியவர்கள் சிறுபான்மை சமூகத்தினரே. இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் ஆதரவை மீண்டும் நிருபிக்கின்ற வகையில் காத்தான்குடிக்கூட்டம் அமையும். காத்தான் குடிநகர சபையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிச்சயம் வெல்லும். அவ்வாறு வெற்றி பெற்றால் அது தேசிய ரீதியில் பேசப்படும் ஒரு முக்கிய பேசு பொருளாக மாறும். அது எமது சமூகத்துக்கும், காத்தான்குடி மக்களுக்கும் ஏராளமான நன்மைகளைப் பெற்றுத்தரும்.

ஜனாதிபதி முஸ்லிம்கள் பற்றிச் சிந்திக்கும் போது காத்தான்குடி மக்கள் தன்னுடன் உள்ளார்கள் என்பதை எப்போதும் மறக்கமாட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# புதிய அரசமைப்பு ஊடாக தமிழ் மக்கள் உரிமை கிடைக்கும்

அம்பாறை,ஜன.19

புதிய அரசமைப்பு ஊடாகத் தமிழர்களின் உரிமையை வென்றெடுப்பதற்காகவும் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான தீர்வைக் காணவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைகின்றது என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை - கல்முனை பாண்டிருப்பு கிராமத்தில் 10ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பொ.செல்வநாயகம் இல்லத்தில் அவரது தலைமையில் தேர்தலுக்கான கட்சிக்காரியாலய திறப்பு விழா நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் மேலும் உரையாற்றுகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடைப்பதற்காக உள் நாட்டிலும், சர்வதேசத்தில் இருந்து செயற்படும் சில அமைப்புக்களும் முனைப்புடன் செயற்படுகின்றன.


கோடீஸ்வரன் எம்.பி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக வரியை பெற்ற சிலர் தங்களது சுய நலனுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்படுகின்றனர் எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் தற்போது தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

நிரந்தரமான வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி முறை ஆட்சி மூலம் தமது உரிமையை வென்றெடுக்க வேண்டும் அப்போதுதான் நிரந்தரமான நிலைபேறான அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வலியுறுத்தினார்.

# இலங்கைக்கான கனடா தூதர் மட்டு. மாவட்டத்துக்கு விஜயம்

இலங்கையில் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் இலங்கைக்குத் தொடர்ந்து உதவுவதற்கு கனடா தயாராகவுள்ளது என இலங்கைக்கான கனடா தூதர் டேவிட் மக்கென்னென் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதன் முறையாக இலங்கைக்கான கனடா தூதர் டேவிட் மக்கென்னென் விஜயம் செய்துள்ளார். இதன்போது, மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ.யில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்கள் மேற்கொண்டுவரும் கல்வி நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

வாய் பேச முடியாத பிள்ளைகளுக்குத் தொழில் கல்வியை பெற்றுக்கொள்வதற்காகக் கனடியப் பல்கலைக்கழகம் ஊடாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்போது விசேட தேவையுடைய பிள்ளைகளின் தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவேன் எனவும் உறுதியளித்துள்ளார்.




# அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்பெறும் முதலாவது முன்னரங்க அலுவலகம் திறப்பு

மட்டக்களப்பு,ஜன.19

மட்டக்களப்பு – மண்முனை வடக்குப் பிரதேச செயலக முன்னரங்க அலுவலகத் திறப்பு விழா மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் கு.குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் பிரதம அதிதியாக வருகைதந்து முன்னரங்க அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.



இலங்கையில் அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெறும் வகையிலான முதலாவது அரச அலுவலக முன்னரங்க அலுவலகம் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலேயே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் நிதி உதவியில் அமைக்கப்பட்டுள்ள இந்த முன்னரங்க அலுவலகத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையிலும் உடனடியாக தங்களது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வகையிலும் தகவல், காணி, ஓய்வூதியம், மோட்டார் போக்குவரத்து, பதிவாளர் பிரிவு, சமூக நலன், காசாளர், பொருளாதார ஆலோசனை, சான்றிதழ்கள், அனுமதிப்பத்திரங்கள் உள்ளிட்ட பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை ஊக்குவித்தல், இளைஞர் அபிவிருத்தி, பொது மக்கள் நலன் பேணல் வசதி ஏற்படுத்தல், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் கடந்த 5 ஆண்டுகளாக மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை வலுப்படுத்தத் திடசங்கற்பம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.19

ஒருபோதும் பின்னோக்கிச் செல்லாமல் பொருளாதாரத்தை வலுப்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளோம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹொரணை - வகவத்த முதலீட்டு வலயத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்த பின்னர் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அங்கு நிர்மாணிக்கப்படும் ரயர் தொழிற்சாலையையும் பிரதமர் இதன்போது பார்வையிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதமர்-

அரசு ஆரம்பத்தில் வீதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தது. தற்போது தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்கின்றது.

தொழிற்சாலைகளைஅபிவிருத்தி செய்வதால் கூடுதல் வேலை வாய்ப்புக்கள் உருவாகும். பொருளாதாரம் வலுவடையும் என்று பிரதமர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# லிந்துலையில் 2 கடைகள் தீயினால் எரிந்து சேதம்





கொழும்பு, ஜன.19

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெராயா நகரில் நேற்று அதிகாலை 3.15 மணியளவில் சில்லறை வர்த்தக நிலையங்கள் இரண்டு முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீவிபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை என்ற போதிலும் பொருள்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

பிரதேச பொது மக்கள், பொலிஸார், நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்புப்பிரிவினர்ஆகியோர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம்கண்டறியப்படவில்லை என்றும் மின்சார ஒழுக்கு காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக் கடலில் மூழ்கிய 20 கப்பல்

## மத்திய கலாசார நிதியம் அறிக்கை



கொழும்பு, ஜன. 19

இதுவரையில் இலங்கை கடற்பரப்பிற்குள் சுமார் 20 கப்பல்கள் வரை மூழ்கியுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய கலாசார நிதியத்தால் நடத்தப்பட்ட புலனாய்வின்படிஇந்தத்தகவல் தெரியவந்தது என கல்வி அமைச்சு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்த புலனாய்வில் இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.

100 ஆண்டுகளை விட பழைமையானது எனக் கருதப்படும் கப்பல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன அத்துடன்,அவற்றில்பெரும்பாலானவை 25 மீற்றரை விட ஆழமான பகுதியில் சிக்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பல்களில் சரக்குக் கப்பல்கள், நீராவிக் கப்பல் மற்றும் இயந்திரம் மூலம் இயங்கக் கூடிய படகுகளும் அடங்குகின்றன என மத்திய கலாசார நிதியம் கூறியுள்ளது.

இந்தக்கப்பல் தொடர்பான புலனாய்வு மூலம் கண்டெடுக்கப்பட்ட மதிப்புமிக்க தொல்பொருள்கள், காலி கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொல்பொருள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு முழுதும் மேற்கொள்ளப்பட்ட 4 மணிநேர சுற்றிவளைப்பில் பலர் கைது!



கொழும்பு, ஜன.19

நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் கட்டுப்பாட்டுப்பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 4 மணி நேர திடீர் சுற்றிவளைப்புக்களின் போது மதுபோதையில் வாகனம் செலுத்திய 802 பேர் உட்படப் பல குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் வழிகாட்டலுக்கு ஏற்ப கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 10 மணி முதல் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# எவரெஸ்ட் சிகரத்தைக் கடக்க பீரிஸுக்கு உதவினார் பிரதமர்




கொழும்பு, ஜன. 19

யொஹான் பீரிஸ் இரண்டாவது தடவையாகவும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறத்தீர்மானித்தமையை பாராட்டும் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்துள்ளார். (க)

# எக்னெலிகொட கடத்தல் தொடர்பில் உண்மையை கண்டறிய தளபதியின் ஒத்துழைப்பு கோரப்படுகிறது




கொழும்பு, ஜன.19

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட தொடர்பான விசாரணைகளுக்கு உதவுமாறு அவரது மனைவி சந்தியாஎக்னெலிகொட, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியைச் சந்தித்து அவர், எழுத்து மூலமாக இந்த கோரிக் கையை கையளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

பிரகீத் எக்னெலிகொட காணாமற் போய், 8 ஆண்டுகளாகியும், அவரது நிலையைக் கண்டறிவதற்கான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பாதுகாப்புப் படைகள் ஒழுக்கமானவை என்று மதிக்கிறேன். ஒரு சில நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த படைகளினதும், மதிப்பு பாழடிக்கப்படக் கூடாது.

எனவே, பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறியும் விசாரணைகளுக்கு இராணுவத் தளபதி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக இராணுவத் தளபதி கருத்துத் தெரிவிக்கையில்-

எந்தவொரு விசாரணைக்கும் இராணுவம் பக்கச் சார்பின்றி நிச்சயமாக ஒத்துழைப்பு வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் தவறு செய்திருந்தால், அவர் உயர்நிலையில் இருந்தாலும், கீழ் நிலையில் இருந்தாலும், தண்டிக்கப்படுவார். குண்டர்களின் இராணுவத்தை என்னால் வழிநடத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் வாக்களிப்பதற்கு தற்காலிக அடையாள அட்டை

கொழும்பு, ஜன. 19

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் வாக்களிக்க தற்காலிக அடையாள அட்டைகளை பெறமுடியும் என வவுனியாமாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் டி.சி.அரவிந்த ராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின்போது வாக்குகளை அளிப்பதற்காக ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் அத்தியாவசியமானதாகும்.

இதற்காக தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுப்படியான சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, மதகுருமார் அடையாள அட்டை, தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை என்பவற்றைப் பயன்படுத்த முடியும்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய மேற்சொன்ன ஆவணங்கள் இல்லாதவர்கள் கிராம அலுவலர் ஊடாக தேர்தல் ஆணைக் குழுவின் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுகொள்ள முடியும். எனவே, தேவைப்படுவோர் தமது பகுதி கிராம அலுவலர் ஊடாக அதனைப் பெறுவதன் மூலம் வாக்களிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் (19.01.2018)

2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை துவிதீயை பகல்12.22 மணி வரை பின்னர் திரிதீயை.நட்சத்திரம். அவிட்டம் பி.இ.3.27மணி வரை பின்னர் சதயம். மரணயோகம் பி.இ.3.27மணி வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** -பகல் 10.50மணி முதல் 12.20மணி வரை

**சுபநேரம்** - காலை 6.36மணி முதல் 8.06மணி வரை

**திவசம் செய்ய வேண்டிய திதி**- தை மாத வளர்பிறை திரிதீயை

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** அவிட்டம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். அரசாங்க உயர்பதவி, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுக்கு வழி வகுக்கும். எடுக்கும் முயற்சிகள் தடைப்படும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு திருப்தியைத் தரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். சுயதொழிலில் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடைவார்கள்.

**கடகம்** கவலையான நாள். தனவரவு குறையும்.குடும்பத்தில் பல பிரச்சினைகள் தலைதூக்கும். உறவினர் வருகை அதிகரிப்பால் செலவுகள் அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகும்.

**சிம்மம்** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கன்னி** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். தைரியமும், துணிச்சலும் பெண்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். முதலீடு இல்லாத தொழிலில் பேச்சால் ஆதாயம் கிட்டும்.

**துலாம்** யோகமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். புதியவீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். திருமணமாகாதோருக்கு அதற்கான வாய்ப்புகள் வலிய வரும்.

**விருச்சிகம்** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக பூர்வமாகத் திறைய அலைய வேண்டி வரும். கொடுத்த கடனை வசூல் பண்ண அலைந்து திரிவார்கள். சிலர் வெளிநாடு செல்ல முகவர்களின் உதவியை நாடுவார்கள்

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். வியாபாரத்தில் சுமாரான முன்னேற்றம் கிடைக்கும். செய்யும் தொழிலில் கவனம் தேவை.

**மகரம்** இன்பமான நாள். தனவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் கைகூடும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். சகோதர உறவு வலுப்படும். பகையாய் இருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.தாய் வழிச் சொத்துக்கள் வந்து சேரும்.

**மீனம்** துயரமான நாள். பணவரவு குறையும். தேகாரோக்கியம் பாதிப்படையும். வைத்திய செலவுகள் அதிகரிக்கும். வேலை செய்யும் பெண்களுக்கு பல இடையூறுகள் உண்டாகும். வேலைப்பளு, அலைச்சல் உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: உத்தராடம் 2ஆம் 3ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதங்கள், சதயம் பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.**

# மக்கள் நம்பிக்கையைக் காப்பாற்ற ஈ.பி.டி.பியை வெற்றி பெறச்செய்க!

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை



மக்கள் எமக்கு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்வார்களானால் அவர்களது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஒருபோதும் வீணடிக்கப் படமாட்டாது. என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி மீசாலை பகுதியில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு கடந்தகாலங்களில் மக்கள் யாரை நம்பி வாக்களித்தார்களோ அவர்களது ஏமாற்றுவித்தைகள் இன்று வெள்ளிடை மலையாகத் தெரிகின்றன. அதுமட்டுமன்றி, அந்தப் பொய் வேதாரிகளது முகத்திரை கிழிந்துள்ள நிலையில் அவர்கள் மக்கள் முன்வர அச்சப்படுகின்றார்கள்.

அந்தவகையில், முதுகிலே புண் இருப்பவனே காட்டுக்குள் நுழையபயப்படுவான். ஆனால், நாம் ஒருபோதும் அவ்வாறு பயப்படப்போவதில்லை. ஏனென்றால் எமது முதுகில் புண் இல்லை என் பதை நான் பகிரங்கமாகவும் வெளிப் படையாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியை நோக்காகக் கொண்டு பல அரசியல் கட்சிகள் இன்று களமிறங்கியுள்ளன. இந்தக் கட்சிகளில் மக்களுக்காக மக்களுடன் நின்று - உழைக்கும் கட்சி எது என்பதை மக்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

தேர்தல் வெற்றி என்பது எமது நோக்க மல்ல. இந்தத் தேர்தலில் மக்களாகிய நீங்கள் வென்று இந்தப் பகுதிகளை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அந்த அடிப்படையில்தான் அந்தந்தப் பகுதிகளைச்சேர்ந்த உறுப்பினர்களை நாம் தேர்தல் களங்களில் நிறுத்தியுள்ளோம். இங்கு குறிப்பாக பல்வேறுபட்ட தேவைப்பாடுகளுக்குத்தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக வீதி, சுகாதாரம், சுயதொழில்வாய்ப்பு, வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறு பட்ட தேவைகளை நிவர்த்திசெய்யும் வகையில் எமது எதிர்காலத் திட்டங்கள் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக இங்கு கிடைக்கப் பெறுகின்ற உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி இங்கு வாழும் மக்களது- குறிப்பாக பெண்களை-தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களினதும் விசேட தேவைகளை உடையோராக வாழும் குடும்பங்களினதும் வாழ்வாதார பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நாம் முழுமையான பங்களிப்பை நிச்சயம் வழங்குவோம் என்றார்.

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை

**யாழ் பிரதேசத்தில்-**

சுன்னாகம் ஒரு பகுதி, Dr. சுப்பிரமணியம் வீதி, ஐயனார் கோவிலடி, மயிலணி, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், தெல்லிப்பழை, நீதிமன்ற கட்டடத் தொகுதி மல்லாகம், சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் புட்சிற்றி ஆகிய இடங்களிலும்-

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

டொன்பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொள்ளவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66ஆவது இராணுவ படைமுகாம், பிள்ளை யார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்**

சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரிய கூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம் பஸ்கட கிராமம், தவசிகுளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# தரம் 5 புலமைப்பரிசில் செட்டித்தெரு மெ.மி.த.கவில் மூவர் சித்தி

யாழ். செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலையில் 2017ஆம் ஆண்டு தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

லோகேஸ்வரன் வருண் - 164, சந்திர சேகரம் கோபிராம் - 156 மீளாய்வு பெறுபேற்றின் அடிப்படையில் சித்தியடைந்த மாணவன் சதீஸ்வரன் சுடர்நிலவன்-155.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிக்கப்பட்ட இறையாண்மையைக் கோரவில்லை; பகிரப்படும் இறையாண்மையையே கோருகிறோம்!

## ‘காலைக்கதிர்’ ஆசிரிய தலையங்கத்துக்கு சுமந்திரன் பதில்

*“பிரிக்கப்பட்ட இறையாண்மையை நாம் கோரினால் அது நாட்டைப் பிரிக்கின்றோம் என அர்த்தப்படுத்தப் படலாம். அதனால் தான் நாம் பகிரப்படும் இறையாண்மையைக் கோருகின்றோம்.”*

– இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

‘காலைக்கதிர்’ நாளிதழின் நேற்றைய ஆசிரிய தலையங்கத்தில் எழுப்பப்பட்ட வினாக்களுக்குத் தாம் வழங்கிய பதிலிலேயே அவர் இந்த விளக்கத்தைத் தந்திருக்கின்றார்.

மேற்படி ஆசிரிய தலையங்கத்தில் சுமந் திரன் எம்.பியிடம் இரண்டு வினாக்கள் தொடுக்கப்பட்டிருந்தன. (வாசகர்களின் தெளிவுக்காக நேற்றைய ஆசிரிய தலையங்கம் அருகில் தனியாக மீளவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

ஒன்று – முதல் தடவையாகத் தற்போதைய இடைக்கால அறிக்கையில்தான் ‘இலங்கை மக்களின் பிரிக்கப்பட முடியாத இறையாண்மை’ பற்றி பிரஷ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதனை ஏற்பது தமிழர் தேசத்துக்குத் தனியான இறையாண்மை இல்லை என்பதை அங்கீகரிப்பதாக அமைந்து விடாதா? – என்ற சாரப்பட அமைந்தது.

அடுத்தது – அதிகாரப் பகிர்வு அலகுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பறித்துக் கொள்வதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் இடைக்கால அறிக்கையில் தெளிவாகவும் உறுதியாகவும் இல்லையே என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த இரண்டு விடயங்களுக்கும் சுமந்திரன் எம்.பி. விளக்கமளித்தார்.

அவரது விளக்கம் வருமாறு:–

**பகிரப்பட்ட இறையாண்மை**

*இறையாண்மை என்றால் என்ன? பலருக்கும் அது விளங்குவதில்லை.*

*பிரிட்டனில் நாடாளுமன்றத்தில் இராணி (Queen is in Parliament) இருப்பதுதான் இறைமை என்கின்றார்கள். அப்படியானால், அங்கு மக்களிடம் இறைமை இல்லையா என்று கேள்வி எழுகின்றது. அப்படிக் கூறமுடியாது.*

*இந்த ‘இறைமை’ என்ற விடயம் முடியரசு காலத்திலிருந்து உருவானது. அப்போது இறைமை மன்னனிடம் இருந்தது.*

*அது – அதாவது, மக்களை ஆட்சி செய்கின்ற அதிகாரம் – எப்படி அவனுக்கு வந்தது?.*

*இறைவனால் அது அவனுக்கு வழங்கப்பட்டது என்று அதனை அர்த்தப்படுத்தினர். இறைவனால் வழங்கப்பட்டது இறையாண்மை ஆயிற்று.*

*பின்னாளில் குடியாட்சி வந்ததும் அது மக்களிடம் என்றாயிற்று.*

*இறைமை என்பது கையால் தொட்டுணரக்கூடிய ஒன்றல்ல. அது ஓர் எண்ணக்கரு.*

*பிரிட்டனில் முடிக்குரிய இறைமை– அரசியை – நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்துகின்றது. அதனாலேயே அங்கு இறைமை என்பது ‘நாடாளுமன்றத்தில் இராணி’ என அர்த்தப்படுகின்றது.*

*இறைமை என்பதை பரந்த – வியாபித்த – அடிப்படையில் நாம் நோக்க வேண்டும்.*

*இறைமை பிரிக்கப்படுவதாக (Divisible Sovereignty) நாம் பேசினால், நாங்கள் நாட்டைப் பிரிக்க முயற்சிக்கின்றோம் என அர்த்தப்படுத்த முயலுவார்கள்.*

*பகிரப்படும் இறைமை (Shared Sovereignty) பற்றியே நாம் பேசி வந்திருக்கின்றோம்.*

*2015 எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சரி, அதற்கு முந்திய எமது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் சரி, பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் எமக்குள்ள உரித்துரிமை பற்றியே நாம் குறிப்பிட்டுள்ளோம்.*

*இதனை, இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், 2017 ஓகஸ்ட் நான்காம் திகதி தான் வழங்கிய தீர்ப்பிலும் இலங்கை உயர் நீதிமன்றம் ஏற்று அங்கீகரித்திருக்கின்றது.*

*“பகிரப்பட்ட இறைமையின் அடிப் படையில், உள்ளக சுயநிர்ணயக் கோட் பாட்டின் பிரகாரம், ஒரு நாட்டுக்குள் நியாயமான தீர்வு கோரும் உரிமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உண்டு” – என உயர் நீதிமன்றம் நீண்ட சட்ட விவாதங்களின் பின்னர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கின்றது.*

*எனவே, நாடு பிரிக்கப்படவில்லை என்பதைக் காட்டவே ‘இறையாண்மை பிரிக்கப்பட முடியாதது’ என்ற வாசகம் அங்கு இடம்பெறுகின்றது. ஆனால் அதன் அர்த்தம், இறைமை பகிரப்பட முடியாதது என்பதல்ல. அதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.*

**அதிகாரத்தை மீளப்பறிப்பதை தடுத்தல்**

*‘பகிரப்பட்ட அதிகாரங்கள் மாகாணங்களில் இருந்து ஒருதலைப்பட்சமாக பறிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அரசமைப்பு ரீதியான போதிய காப்புக்களைச் செய்தல்’ குறித்து, இடைக்கால அறிக்கையின் (தமிழ் பிரதியின்) 30 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*புதிய அரசமைப்பு மூலம், மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் மத்திய அரசால் மீளப்பெற முடியாதவையாக இருக்கவேண்டும் என்பதை, அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் சகல தரப்பினரும் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளனர்.*

*ஆனால், அதற்கான திட்டவட்டமான – தெளிவான – பொறிமுறையாது என்பது இன்னும் இறுதி செய்யப் படவில்லை. அது இடைக்கால அறிக்கையில் இல்லை என்று மேற்படி ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டிய அம்சம் சரிதான்.*

*அது கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டு, பொறிமுறை இறுதி செய்யப் படாமல் உள்ள விவகாரம்.*

*அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் ஒரு பகுதி தான் இப்போது நடந்திருக்கின்றது. அது, தொடர் நடவடிக்கையாக இன்னும் தொடர வேண்டியுள்ளது. இன்னும் பேசப் படவேண்டிய விவகாரமாக உள்ளது.*

*ஆனால், வழங்கப்படும் அதிகாரங்களை சம்பந்தப்பட்ட மாகாணத்தின் இணக்கமின்றி, மத்திய அரசு பறிக்கக்கூடாது, அதற்கான ஏற்பாடு புதிய அரசமைப்பில் இருக்கவேண்டும் என்பதைக் கொள்கை அளவில் வழிகாட்டல் குழுவில் சகல தரப்புகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. அதற்கான பொறிமுறையைத் தீர்மானிப்பதே எஞ்சியுள்ளது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*‘அதிகாரப் பகிர்வு மற்றும் அடிப்படை உரிமைகள் உள்ளடங்கலாக அரசமைப்பு சம்பந்தமான அடிப்படை அம்சங்களைத் திருத்தியமைப்பது தொடர்பில் மேலதிக அரசமைப்புப் பாதுகாப்பு வழிமுறைகள் அவசியம்’ என்று இடைக்கால அறிக்கையின் 34 ஆம் பக்கத்தில் பிரஷ்தாபிக்கப்பட்டிருப்பது இதனைத்தான். இந்தப் பொறிமுறை குறித்தும் கூட, ஓரளவுக்கு விவாதிக்கப்பட்டிருக்கின்றது. உறுதியான பொறிமுறை ஒன்று வரும் என நாம் நம்புகின்றோம்.*

**விவாதங்கள் அவசியம்**

*இந்த ஆசிரிய தலையங்கத்துக்குப் பதிலளிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*இத்தகைய ஆரோக்கியமான அரசியல் விவாதங்கள், கேள்வி – பதில்கள்தாம் அவசியமானவை. மக்களைத் தெளிவுபடுத்த இத்தகைய கேள்விகளைப் பத்திரிகைகள், ஊடகங்கள் உட்படப் பொதுத்தரப்புகள் எழுப்புவதும், பகிரங்கப் பதில்கள் மூலம் சம்பந்தப்பட்டோர் விளக்கமளிப்பதும் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.*

*அந்த வகையில் இந்த ஆசிரிய தலையங்கம் ஆரோக்கியமானது ஒன்றே.* – என்றார் சுமந்திரன் எம்.பி.

**ஆசிரியர் குறிப்பு**

தமது நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமது ஆசிரிய தலையங்கத்தைக் கருத்தில் எடுத்து, அது வெளியாகிச் சில மணி நேரத்துக்குள்ளேயே பதிலைத் தந்த சுமந்திரனின் அரசியல் நாகரிகப் பண்பியல்புக்கு எமது பாராட்டுக்கள்; நன்றிகள். (ஆ–ர்)

### நேற்றைய ஆசிரிய தலையங்கம்

## தமிழ்த் தேசத்தின் இறைமை மீதான கேள்வி

**நடப்பது என்னவோ உள்ளூராட்சி சபைத் தேர்தல்தான்.**

**ஆனால், தமிழர் தரப்பில் சர்ச்சைக்குரிய விடயமாகியிருப்பது தேசிய மட்டப் பிரச்சினையான, புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை பற்றிய விவகாரம் என்பதுதான் நிலைமை.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை - குறிப்பாக சம் பந்தன், சுமந்திரன் போன்றோர் - இடைக்கால அறிக்கையில் தங்கி, விடயங்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது பற்றிப் பேசுகின்றனர்.**

**ஆனால், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக் னேஸ்வரனிலிருந்து, அவரது இணைத் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ் மக்கள் பேரவை, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற தரப்புகள் வரை இடைக்கால அறிக்கையை நிராகரித்துக் கருத்து வெளியிட்டு வருகின்றன.**

**ஆக, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் தரப்பில் பிரதான பேசு பொருளாக இடைக்கால அறிக்கையே மாறியிருக்கின்றது.**

**இன்னும் கொஞ்சம் ஆழமாக நோக்கினால், தமிழர் தரப்பில் இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்துக் கணிப்பாக இந்தத் தேர்தல் மாறியிருக்கின்றமையும் கூடக் கண்கூடு.**

**இத்தகைய இடைக்கால அறிக்கை மீதான தரப்புகளின் வாதம் - அல்லது விவாதம் - இன்னும் தர்க்க ரீதியானதாக, நிபுணத்துவ ரீதியானதாக, அறிவு சார்ந்ததாக மாறாமல், வெறும் உணர்ச்சியூட்டுவனவாகவே இருப்பது மிகவும் கவலைக்குரியது.**

**‘ஏகிய ராஜ்ய’ என்ற சிங்களச் சொல் வழமையாக ஒற்றையாட்சியைக் குறிப்பது என்பதுதான் உண்மை. ஆனால் இடைக்கால அறிக்கையில் அந்தச் சொல் பயன்படுத்தப்படும் இடத்திலேயே அடைப்புக் குறிக்குள் அதன் விளக்கம் (‘பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத நாடு’ எனும் பொருளாகும் என்று) தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**உத்தேச ஏற்பாடுகளின் படி, புதிய அரசமைப்பில் முதலாம், இரண்டாம் உறுப்புரைகளில் இந்த ‘ஏகிய ராஜ்ய’ என்ற சொல் வரும் இடத்தில் அதன் பொருள் இன்னதுதான் என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று கூறப்படுகின்றது.**

**அத்தகைய சூழலில் அந்த சொல் ஒற்றையாட்சியையே அங்கு குறிக்கும் என்று வாதிடுவது -**

**இடைக்கால அறிக்கையில் அதே உறுப்புரைக்குரிய விளக்கத்தில் ஆங்கிலப் பதமான Unitary State (சமஷ்டி அரசு) இலங்கைக்குப் பொருத்தமற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையிலும், அப்படி வாதிடுவது -**

**பொருத்தமற்றதாகவே நமக்குப்படுகின்றது.**

**ஆனால் இந்த இடைக்கால அறிக்கையில் இவற்றுக்கு அப்பாலும், சில சர்ச்சை கள் உள்ளன. அவற்றைச் சுட்டிக்காட்டி சுமந்திரனிடம் விளக்கம் கோருவது பொருத்தமானதுதான் எனக் கருதுகிறோம்.**

**தற்போதைய அரசமைப்பில் 3 ஆம் உறுப்புரிமையின்படி *‘நாட்டின் இறைமை மக்களுக்குரியது. பாரதீனப்படுத்த முடியாதது’* என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இடைக்கால அறிக்கையின் முதல் உறுப்புரையே *‘இலங்கையின் இறைமை மக்களுக்குரியதாக இருப்பதோடு பாரதீனப்படுத்த முடியாததாகவும், பிரிக்கப்பட முடியாததாகவும் இருக்க வேண்டும்’*- என்று கூறுகின்றது.**

**ஆக, இப்போதுதான் முதல் தடவையாக இந்த இடைக்கால அறிக்கை மூலம், இலங்கையில் *‘பிரிக்கப்பட முடியாத இறைமை’* இருப்பது குறித்து வலியுறுத்தப்படுகின்றது.**

**இது, இலங்கைத் தீவில் தமிழருக்குத் தனித்துவமான இறைமை - இறையாண்மை - உள்ளது என இவ்வளவு காலமும் நாம் வலியுறுத்திப் போராடும் விடயத்தை அடியோடு மறுத்துரைக்கும் ஏற்பாடல்லவா?**

**இதனை ஏற்றால், இலங்கைத் தீவில் தமிழர் தேசம், தமிழர் தாயகம், அந்தத் தாயகத்துக்குத் தனியான இறையாண்மை என்பவை ஏதும் இல்லை என்றாகி விடாதா?**

**சமஷ்டியோ, சுயாட்சியோ, உள்ளக சுயநிர்ணய உரிமையோ - எதுவென்றாலும் - இந்தத் தீவின் பூர்வீகமான தமிழர்களுக்குத் தனித்துவமான இறையாண்மை இங்கு உள்ளது என்ற அடிப்படையிலிருந்துதானே உருவாகின்றது? அந்தத் தனித்துவமான இறையாண்மை தமிழருக்கு இல்லை என்றால், சமஷ்டிக் கோரிக்கைக்கும், சுயநிர்ணய வலியுறுத்தலுக்கும், சுயாட்சி வற்புறுத்தலுக்கும் அடிப்படை ஏது? நியாயம்தான் ஏது?**

**அடுத்தது -**

**அதிகாரப் பரவலாக்கல் அலகுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை, மத்திய அரசு மீளப் பெற முடியாமலும், அந்த அதிகாரங்களை மத்திய அரசு தான் பிரயோகிக்க இயலாமலும் இருப்பதை உறுதிப்படுத்தினால் அது சமஷ்டி அடிப்படைதான் என்பதே சம்பந்தன் - சுமந்திரனின் வாதமாகும். அது தமிழ்த் தேசத்தின் இறைமையின் அடிப்படையிலான சமஷ்டியா?**

**சரி, அப்படியே வைத்துக் கொண்டாலும் அப்படிப் பகிர்ந் தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளவும் பறிக்காமல் இருக்கின்றமையை உறுதி செய்யும் ஏற்பாடுகள் இடைக்கால அறிக்கையில் தெளிவாகவும் திட்டமாகவும் இல்லையே...!**

**இத்தகைய பின்புலத்தில் இந்த இடைக்கால அறிக்கையை நம்பி இதற்குப் பின்னால் தமிழர்கள் செல்வது எங்ஙனம்? சுமந்திரனின் பதிலை தமிழினம் எதிர்பார்க்கின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: வொன்.வேணுகிருஷ்ணா




ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் மேலாதிக்கம் கொண்ட போருக்கு-தயாரான ஒரு இராணுவக் கூட்டணிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தை விரி வாக்குவது என்பதே இதன் மூலம் FAZ அர்த்தப்படுத்துகிறது. குறிப்பாக பசுமைக் கட்சியினரும் சமூக நாயகக் கூட்டணியும், பிரெஞ்சு ஜனாதிபதி



இமானுவல் மக்ரோன் உடனான நெருக்கமான கூட்டுறவின் அடிப்படையில் அமைந்த இந்தக் குறிக்கோளைத் தான் பின்தொடர்ந்து வருகின்றன. இதே இது, சான்சிலர் மேர்க்கெல் மற்றும் CDU இன் பிரிவுகளுக்கும் செல்கி றது. ஆனால், அவை நிதியியல் கொள்கையில், மக்ரோனின் கோரிக்கைகளை SPD ஐ விடச் சற்றுக் குறைவாக ஏற்றுக்கொள்ள விரும்புகின்றன.

மகா கூட்டணியின் பிரதான ஆதரவாளர்களில் ஒருவரான, தற்காலிக பதவியில் உள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் சிக்மார் காப்ரியேல் (SPD) அண்மையில் Körber அமைப்பின் வெளியுறவுக் கொள்கை விவாதக் குழுவுக்கு வழங்கிய ஓர் உரையில், இந்தத் திசையை அபிவிருத்தி செய்தார். 'பிரான்ஸில் ஆக்ரோஷமான ஒரு ஐரோப்பிய-சார்பு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வரலாற்றுக் கோணத்தில் நிஜமாகவே அதிருஷ்டத்தின் தாக்கம் தான்' என்று குறிப் பிட்ட அவர், தார்மீக மதிப்புகளில் கட் டுண்டு இல்லாமல் இராணுவ பலத்தைப் பிரயோகிக்கும் அடித் தளத்தில் ஜேர்மனி மற்றும் ஐரோப்பாவுக்கான நலன்களின் அடிப்படையில் ஒரு வல்லரசு கொள்கைக்கு வெளிப் படை யாகவே அறிவுறுத்தினார்.

ஒரு மகா கூட்டணிக்கு அழுத்த மளித்து வரும் காப்ரியேலும் ஏனைய அரசியல்வாதிகளும்இ இந்தக் குறிக் கோளை எட்டுவதற்கான வாய்ப்பு கதவு வேகமாக மூடி வருவதாக கருது கிறார்கள். தேசியவாதக் கொள்கைகளின் பெயரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைவை தீர்க்கமாக நிரா கரிக்கின்ற வலதுசாரிக் கட்சிகள், பல ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து வரு கின்றன.



**போலாந்து மற்றும் ஹங்கேரியில் அதுபோன்ற கட்சிகள் சில காலமாக இருந்து வருகின்ற நிலையில், 'செக் நாட்டின் ட்ரம்ப்', ஆண்ட்ரிஜ் பாபிஸ், கடந்த வாரம் பிராக் பிரதம மந்திரியாக பதவியேற்றார். ஆஸ்தி ரியாவில், வலதுசாரி தீவிரவாத சுதந்திரக் கட்சியின் (FBO) ஓர் அங்கத்தவரை வெளியுறவு அமைச்சராகப் பதவியில் அமர்த்தும், பழமைவாத ஆஸ்திரிய மக்கள் கட்சிக்கும் (ÖVP) சுதந்திரக் கட்சிக்குமான ஒரு கூட்டணிஇ அநேகமாக அடுத்த வாரம் அதிகாரத்திற்கு வருமெனத் தெரிகிறது.**

அடுத்த ஆண்டு மார்ச் 4 இல் திட்டமிடப்பட்டுள்ள இத்தாலிய தேர்தல்களில் ஒரு வலதுசாரி கூட்டணி வெற்றி அடையக்கூடும். பிரான்ஸி சில், CDU/CSU இன் சகோதரத்துவக் கட்சியான குடியரசுக் கட்சி சமீபத்தில் லோரான்ட் வோக்கியேவை (Laurent Wauquiez) அதன் புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அவர் பாசிசவாத தேசிய முன்னணியுடன் பல்வேறு வலதுசாரி நிலைப்பாடுகளைப் பகிர்ந்து கொள்கிறார். மேலும் அவற் றுடன் அவர் ஓர் ஆளும் கூட்டணியை உருவாக்க முடியுமெனக் கருதப்படுகி றது.

ஒருபுறம் ஐரோப்பிய ஒன்றியத் தைத் தழுவிநிற்கும் மகாகூட்டணியின் ஆதரவாளர்கள், மத்திய கிழக்கு சம் பவங்களாலும் உந்தப்பட்டு வரு கின்றனர். அங்கே ஐரோப்பிய நலன் கள் அதிகரித்தளவில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவின் நலன்களுடன் மோதலில் உள்ளன.

செவ்வாயன்று Süddeutsche Zeitung ஒரு கருத்துரையில், அமெ ரிக்கா பின்வாங்கியதால் ஏற்பட்ட இடத்தை ரஷ்யாவும் சீனாவும் ஆக் கிரமித்து வருகின்றன என்றும், அவற் றின் சொந்த புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார திட்டநிரலைப் பின் தொடர்கின்றன என்றும் எச்சரித்தது. இது 'பெரும்பாலும் ஐரோப்பிய நலன் களுடன் பொருத்தமின்றி' இருப்பதாக அப்பத்திரிகை குறிப்பிட்டது.

அக்கருத்துரை, மத்திய கிழக்கில் ஐரோப்பியர்கள் செயலூக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதை அங்கீ கரிக்கும் ஜனாதிபதி மக்ரோனைப் புகழ்ந்தது. ஆனால், மத்திய கிழக்கில் மிகவும் சுதந்திரமான ஐரோப்பிய கொள்கை அதன் முன்தேவைகள் குறித்து நாம் நேர்மையுடன் இருந்தால் மட்டுமே வெற்றி பெறுவதற்கான சாத்தியக் கூறை கொண்டுள்ளது. வெறும் பொருளாதார மற்றும் அபி விருத்தி நிதியுதவியால் மட்டும் ஒன்றையும் பாதுகாக்க முடியாது என்று குறிப்பிட்டது.

வேறெந்த பிராந்தியத்தையும் விட அதிகமாக, அங்கே பெரும் பலமே முடிவெடுக்கும் காரணி யாக இருப்பதாக Süddeutsche Zeitung நிறைவுரையில் குறிப் பிட்டது. புட்டின் மனதில் பதிய வைக்கும் விதத்தில் சிரியாவில்





இராணுவ தலையீடு செய்து இதை எடுத்துக்காட்டினார். இராணுவ பின்புலம் இல்லாமல் செல்வாக்கை பெறமுடியுமென யாரொருவர் நம்பு கிறாரோ அவர் முழுமையாக ஏமாற்றம டைவார் என்று கருத்துரை தொடர்ந்து குறிப்பிட்டது.

ஜேர்மனியும் ஐரோப்பாவும் தங் களின் வல்லரசு அரசியலை மத்திய கிழக்கிலும் வேறு இடங்களிலும் பலவந்தமாகப் பின்தொடர வேண்டு மானால் அவை மீள்ஆயுதபாணியாக வேண்டும் என்ற தொனி, இடது கட்சி உட்பட நாடாளுமன்றத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளாலும் ஆதரிக்கப்படுகிறது.

இடது கட்சி நாடாளுமன்றத் தலைவர் Dietmar Bartsch நாங்கள் சிக்மார் காப்ரியேலை ஆதரிக்கிறோம், இது விரைவில் அரசு கொள்கையாக மாறு மென நம்புகிறோம்' என்று குறிப்பிட்டு, காப்ரியேலின் இராணுவ வாத உரை யைப் பாராட்டினார்.

மகா கூட்டணி குறித்த பேச்சுவார்த் தைகள் இழுபறியில் இருக்கின்ற நிலையில், நடப்பு அரசாங்கமும் நாடாளுமன்றமும் ஏற்கனவே களத்தில் உண்மைகளை உருவாக்கி கொண்டி ருக்கின்றன.



(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





ஸ்ரீ.பிரசாந்தன், த.ஜெயசீலன், ச.மணிமாறன், த.சிவசங்கர்

# உன்னைச் சரணடைந்தேன்



## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 71

**தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தாக்குதல் போராட்டம் (06.06.1992)**

**திலகநாயகம்போல் பாராட்டு (1993)**

சங்கீத பூஷணம் திலகநாயகம் போல் அவர்களின் பொன் விழாவை யொட்டி, அவருக்குக் கம்பன் கழகம் ஒரு பாராட்டினை நடத்தியது. பதக்கம், விருது முதலியவை அளித்து, நாம் அவரைக் கௌரவித்ததோடு, காலை நிகழ்ச்சியாக இசைக் கருத்தரங்கத்தையும், மாலை நிகழ்ச்சியாக போல் அவர்களின் கச்சேரியையும், அந்த விழாவில் நடத்தினோம். கழகத்தோடு பகைத்து நின்ற பொன். சுந்தரலிங்கம், தனது விழாவுக்குப் போட்டியாகவே இந்த விழாவை நாம் நடத்தியதாய் அப்போது விமர்சித்தார்.

★ ★ ★

**பன்னிரண்டாவது கம்பன் விழா (நல்லூர் வீதி) (02.04.1993)**

1993 ஏப்ரல் 2,3,4,5,6 ஆம் திகதிகளில் இவ்விழா நடைபெற்றது. கடந்த கம்பன் விழாவில் பெரும் இரசிகர் கூட்டம் சேர்ந்ததால், நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் போதாது போக, நல்லூர் முதலாளியிடம் அனுமதி பெற்று, இவ்வாண்டுக் கம்பன் விழாவை நல்லூர்க் கோயில் வடக்கு வீதியில் நடத்தினோம். கோயிலடியில் மற்ற நிகழ்ச்சிகளுக்கு இடங் கொடுக்காத நல்லூர் எஜமான், எங்கள் மேல் அன்பும் நம்பிக்கையும் கொண்டு, கோயில் வீதியில் விழா நடத்த அனுமதி தந்தார். நல்லூர் வடக்கு வீதியில் யாழ்ப்பாணமே வியக்கும் வண்ணம், அழகான சொக்கட்டான்பந்தல் போட்டு இவ்விழாவினை நடத்தினோம். விழாத்தொடங்குவதற்கு முன்னரே எங்களது சொக்கட்டான் பந்தலைப் பார்க்கவென, பெருங்கூட்டம் வரத் தொடங்கியது. எங்களது விழா, பிரம்மாண்டமான யாழ்ப்பாணம் கண்டுகளித்தது. வெண்மணல் விரிந்த வீதியில் குண்டு வீச்சுப் பீதியையும் மறந்து, நடுச்சாமம் வரை இலக்கியத்தில் திளைத்து ஆயிரக் கணக்கானோர் மகிழ்ந்த விழா அது. நல்லூர் நான்கு வீதிகளிலும் விழாவைப் பார்க்க வந்த கூட்டம் நிறைந்து நின்றிருந்தது. இவ்விழா எமது கழக வரலாற்றில் முக்கியமானது.

ஒரு முழுமையைப் பெற்றது. இவ்விழாவிலிருந்து தான், உறுப்பினர்களுக்கு, பேராளர்களுக்கு எனத் தனித்தனி 'பட்ச்' சுகள் செய்தோம். போர்க்காலத்தில், அத்தகையவொரு பெருவிழாவை முதன்முதலாக தொன்றினையும், மூத்த அறிஞர் அறுவருக்கான 'மூதறிஞர் விருதுகளையும்', இவ்விழாவிலிருந்து வழங்க ஆரம்பித்தோம். இம் மகரயாழ் விருதிற்கு இருபத்தைந்தாயிரம் பணமுடிச்சும் வழங்கினோம். இவ்

★ ★ ★

**மகர யாழ் விருது**

இலக்கியம் மண்ணோடு கலக்காமல் வெறும் கற்பனா உலகத்தில் மட்டும் நின்று விடக்கூடாது என்பதற்காக, இவ்விழாவில் சமுதாய நன்முயற்சிகளையும் ஊக்கப்படுத்த நினைத்தோம். அதனால், சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக வாழும் சான்றோர் ஒருவருக்கு, மிகப் பிரமாண்டமான முறையில், 'மகரயாழ் விருது' எனும் பெயரிலான விருதுக்கான சிபாரிசுகளைச் செய்யுமாறு, பத்திரிகை மூலம் வேண்டுகோள் விடுத்தோம். பொதுமக்களும் மன்றங்களும் சிபார்சு செய்த நூற்றுக் கணக்கானோர்களின், மகரயாழ் விருதுக்காக வைத்திய நிபுணர் சிவகுமாரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ் மக்களுக்கென தமது வசதி வாய்ப்புக்களைத் துறந்து சேவையாற்றி வந்த, இவருக்கு மகரயாழ் விருது வழங்கியதை யாழ்ப்பாணமே கொண்டாடியது. இவ்விருதை ஏற்க அவரைச் சம்மதிக்க வைக்கப் பெரும் பாடுபட்டோம். விருதுப் பணத்தை தன் கையாற்கூடத் தொடாமல், வைத்தியசாலைப் பணிப்பாளரை விழா மேடைக்கே வரவழைத்து, அப்பணத்தை அவர் மூலம் வைத்தியசாலைக்கே சேர்ப்பித்தார் டாக்டர். இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர், பண்டிதர் ஏழாலை கந்தையா, பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, மட்டுவில் பண்டிதர் ச.பொன்னுத்துரை, பண்டிதர் க.சச்சிதானந்தன், சிரித்திரன் ஆசிரியர் சி.சிவஞானசுந்தரம் ஆகியோர்க்கு இவ்விழாவில் மூதறிஞர் விருது வழங்கியது கண்கொள்ளாக் காட்சி.

★ ★ ★

**கவலை தந்தனர் கற்றோர்**

இவ் அறிஞர்கள் முதலில் விருது பெற சம்மதித்தனர். விழாவிற்கு ஓரிரு நாள் இருக்கையில், தாம் விருது பெற முடியாதெனச் செய்தி அனுப்பினர். பதறியடித்து நானும் திருமுருகனும் மோட்டார் சைக்கிளில் சென்று முதலில் சங்கானையிலிருந்த வித்தகரைச் சந்தித்தோம். கழகம் உயர் விருதான மகரயாழ் விருதினை, இம்முறை தங்கம்மா அப்பாக்குட்டிக்கே கொடுக்கப் போவதாகவும், அவருக்கு கீழ் இருந்து தான் நாம் விருதுபெற வேண்டியிருக்கும் என்றும், பண்டிதர் சச்சிதானந்தம் விருது பெற இருந்த அறிஞர்களிடம் கூறி, அவர்களைக் குழப்பியிருந்த உண்மை அப்போது தெரியவந்தது. டாக்டருக்குத் தான் மகரயாழ் விருது என்பது தெரிய வந்ததும், விழாவில் கலந்துகொள்ள அவர்கள் சம்மதித்தார்கள். வேறு துறை சார்ந்த ஒருவரை அங்கீகரித்த அவர்களது மனம், தமிழ்த்துறை சார்ந்த செயல் வீரர் ஒருவரை அங்கீகரிக்க மறுத்தது கண்டு வியந்தேன். புலமைக் காய்ச்சல். பின்னர், பண்டிதர் சச்சிதானந்தத்தையும் சமாதானம் செய்து ஒருவாறு விழாவிற்கு அழைத்து வந்தோம்.

★ ★ ★

(தொடரும்...)



விருது பெற்ற டாக்டர் சிவகுமார்



பன்னிரண்டாவது கம்பன் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# யாழ்.மாநகர சபை மேயராக இந்து ஒருவரே வரவேண்டும் என்கிறது இந்து சமயப் பேரவை

## செயலாளர் சக்திகிரீவன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19

இந்து மதத்தவர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப் படுகின்றார்கள். பெரும்பான்மை மக்கள் வாழ்கின்ற யாழ்.மாநகர பிரதேசத்தில் இந்து ஒருவரையே– அல்லது இந்து பிரதிநிதியைக் கொண்ட கட்சியையே - மக்கள் தெரிவுசெய்யவேண்டும்.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிக்கை ஒன்றை அதன் செயலாளர் கி.சக்திகிரிவனால் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தமிழ் அரசியல் கட்சிகள் திரிகரண சுத்தியோடு மதசார்பின்மையைக் கடைப்பிடிக்கத் தயங்கினால் இந்துக்களும் தமது தனித்துவத்தைப் பேணுவதற்குத் தனியான அரசியல் அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டியமை தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்நாட்டில் பௌத்தர்கள்தமதுதனித்துவத்தைப் பேணுவதற்குத் தயங்குகின்றமை கிடையாது, அதேபோல் முஸ்லிம்கள் தமது அடையாளத்தை நிலைநாட்ட முஸ்லிம் சார்ந்த கட்சிகள் அமைத்துச் செயற்படுகிறார்கள். கிறிஸ்தவர்களும் தமது அடையாளத்தைத் திட்டமிட்டு மிக நுட்பமாகக் காப்பாற்றி வருகிறார்கள். இது அவர்களுடைய உரிமை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், இந்துக்கள் தமது அடையாளத்தை வெளிப்படுத்த முற்பட்டால் அவர்களுக்கு மதவெறிப் பட்டம் சூட்டி மகிழ்கிறார்கள். இந்தஅநியாயத்தைத் தட்டிக்கேட்பதற்கு இந்துக்களிடம் முறையான அரசியல் தலைமை இல்லாது இருப்பதே பெரும் குறையாகக் காணப்படுகிறது.

இந்துக்கள் தவிர்ந்த ஏனைய மதத்தவர் அரசியல் சூழ்நிலையில் எப்படிநடந்துகொள்ளவேண்டும் என்பதை அவர்களை வழி நடத்தும் மதத் தலைவர்கள்வழிபாட்டோடுசேர்த்துப் பாடங்களாகக் கற்பிக்கிறார்கள். எம்மிடையே உள்ள தலைவர்களிடம் இந்த உணர்வு கிடையவே கிடையாது. இவர்கள்எமது மத பேதங்களை மட்டும் தாங்கி உரிய கூட்டங்களில் பங்பற்றுவதில்மனநிறைவு காண்கிறார்கள். நான் ஏனைய மதத் தலைவர்களைக் குறைகூறவில்லை. அவர்களின் செயற்பாடு அவர்களைப் பொறுத்தவரையில் சரியானதே. எமது மதத்தவர்கள் ஏன் அடிமைகள்போல் வாழவேண்டும் என்று சிந்திக்க வேண்டியிருந்தது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இந்துக்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டால் எதிர்வரும் மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் அது பிரதிபலிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. அறுபது ஆண்டுகளாகத் தமிழ் அரசியல்களை நடத்தித் தமிழ் மக்களை நிர்க்கதி ஆக்கியமைமையை விட இவர்கள் எதையும் சாதித்தவர்கள் அல்லர். தேர்தல்கள் வரும்போது சர்வதேசம்கூர்ந்து அவதானிக்கின்றது என்று கூறி இந்துக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுத் தமது தொடர் சாணக்கியத்தை நிலைநாட்டி வருகின்றார்கள்.

கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் தெற்கிலுள்ள பௌத்த மதத் தலைவர்களோடு தொடர்புகளை நன்கு பேணிக்கொண்டு இந்துக்களைப் பௌத்தர்களோடுதொடர்புபடவிடாது பல்வேறு தந்திரங்களையும் யுக்திகளையும் கையாள்வது அனைவரும் அறிந்த பரம இரகசியம்.

இந்துக்கள் பௌத்தர்களோடு இணைந்து வாழ்வதற்கு கிறிஸ்தவர்களின் உதவியே தேவைப்படுகிறது. இவர்கள் வடக்கில்ஒருகதையும்தெற்கில் ஒரு கதையும் பேசுகிறார்கள். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாநகர மேயராக இந்து ஒருவர் வருவதில் குழப்பங்களைமேற்கொள்ளும் கட்சிகளை இந்து மக்கள் துணிந்து நிராகரிக்கின்றமை அவர்களின் ஜனநாயக உரிமையாகும்.

இதன்பின் இந்துக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற ஓர் இந்துக் கட்சியை நிறுவுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

அப்படி ஓர் இந்து பிரதிநிதித்துவம்வருமேயானால் அறுபது ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத இனப் பிரச்சினைக்கான தீர்வை அறுபது நாள்களில் தீர்த்துக் கொடுப்பதன்மூலம் சகல இனமத மக்களையும் ஒரு குடையின் கீழ் வாழ்விப்பதற்கு வழி பிறக்கும் என்பது திண்ணமாகும். – என்றுள்ளது.

# தீ சுடுமென்று அன்றே சொன்னோம்; தொண்டமான் எம்.பி. கூறுகிறார்!



கொழும்பு, ஜன. 19

மாற்றம் வேண்டும் என்று எண்ணி செய்த தவறுதான்இன்றுபெரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வைத்துள்ளது.

அன்று செய்த தவறை இனி செய்யாமல் சிந்திக்க வேண்டும். மீண்டும்அந்தத்தவறைச்செய்தால் 5 வருடத்திற்கு தலைதூக்க முடியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் எம்.பி தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியாபிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் புளூம்பீல்ட் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

75 வருட காலமாக இலங்கை தொழிலாளர் காங்கிராஸ் மக்களுக்குக் தேவையானவற்றை தேவையான நேரத்தில் செய்துக் கொடுத்தது.

நெருப்பு சுடும் என்று இ.தொ.கா கூறியும், சுட்டா லும் பரவாயில்லை என்று நெருப்பை தொட்டு இன்று பல பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

நான் அமைச்சராக இருந்த நேரத்தில் உரிய முறையில் வீடுகளை அமைத்துக் கொடுத்தேன். ஆனால், தற்போது முறையற்ற ரீதியில் வீடமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

நமது முன்னோர்கள் உருவாக்கிய தேயிலை மலைகளை நமக்கு பிரித்து கொடுத்தால் என்ன? எம்மால் பராமரிக்க முடியும்.

தேயிலை காணிகள் பிரிக்கப்படுகின்றன. நமது மரக்கறி தோட்டங்கள் தோட்ட அதிகாரிகளால் அபகரிக்கப்படுகின்றன. இதனை மாற்றியமைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண்கள் மதுபான நிலையங்களில் வேலை:

# மங்களவின் சுற்று நிருபத்தை நீக்கியமை உரிமை மீறல் என்கிறார் நடிகை சமனலி!

கொழும்பு, ஜன. 19

பெண்கள் மதுபான நிலையங்களில் வேலைசெய்வதற்கும் மதுபானங்களை கொள்வனவு செய்வதற்கும் அனுமதி வழங்கி நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தை நீக்கியதால் தமது உரிமை மீறப்பட்டுள்ளது எனக் கூறி நடிகை சமனலி பொன்சேகா உள்ளிட்ட 11 பெண்கள் நிதிஅமைச்சர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு சமர்ப்பித்துள்ளனர்.

நிஷாந்தி பண்டாரநாயக்க, எம்.டீ. ஜே.பி.பெர்னாண்டோ, சமணலி பொன்சேகா, சந்திமா ரவினி ஜினதாச, தீபாஞ்சலி அபேவர்தன, சப்ரினா ஏசுபுலி, ஷாரண்ய சேகரம், ரந்துலா த சில்வா, மேனகா கல்கமுவ, சுஜானா கமகே, விஷாகா பெரேரா திலகரத்ன ஆகியோர் மூலம் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர, நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பு சட்டத்தில் 12 (1) மற்றும் 14(1) ஜீ ஆகிய சட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் சட் டத்தின் மூலம் சமவுரிமை சட்டம் மீறப்பட்டுள்ளதாகவும் அதன்படி பெண்கள் மதுபான விற்பனை நிலை யங்களில் வேலை செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை அவர் களது அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிணைமுறி மோசடி அறிக்கை இணையத்தில் வெளியானது!



மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பானஅதிபர்ஆணைக்குழுவின் அறிக்கை, இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக ஜனாதிபதியின் அதிகார பூர்வ இணையத்தளத்தில் இந்த அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மை வாக்குறுதியைக் காப்பாற்றும் வகையில், பிணைமுறி அறிக்கையை ஆங்கிலத்தில் கிடைக்கும் என்று ஜனாதிபதி தமது கீச்சகத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

இந்த அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கையளிப்பதற்காக சபாநாயகரிடம் கையளிக்கப்படாமை குறிப்பிடத் தக்கது.

# மைத்திரி ஜனாதிபதிப் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவார்!

## சுதந்திரக் கட்சி நம்பிக்கை



கொழும்பு, ஜன. 19

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக மீண்டும்போட்டியிடுவார் என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிறைவேற்று அதிகார அதிபர் ஆட்சிமுறை ஒழிக்கப்படாது, அரசமைப்பு மாற்றம் நடைபெறாது, அடுத்த அதிபர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக மீண்டும் போட்டியிடுவார்.

இரண்டாவது பதவிக் காலத் துக்காகப் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேன தான் பொருத்தமான வேட்பாளர்.

அடுத்த ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதில், பெரும்பான்மையான மக்கள் விரும்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
வினாத்தாள் **6**

தரம்-5 | பிரபல ஆசிரியர் | பகுதி I | நேரம்- 45 நிமிடம்

- ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


01. கீழே தரப்பட்டுள்ள 1ம் 2ம் வினாக்களில் வித்தியாசமான உருவைத் தெரிவு செய்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1)



1) A　　2) B　　3) C

02.





1) A　　2) B　　3) C

03. வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான குறியீடு யாது?




04. இந்த உருக்களின் நிரையிலே அடுத்ததாக வரவேண்டிய பொருத்தமான உருவைக் கீழே தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.



05. 


இப்பென்சிலின் நீளம்

1) 4 cm　　2) 5 cm　　3) 4.8 cm

06. 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பின்னம்

1) $\frac{2}{5}$　　2) $\frac{3}{5}$　　3) $\frac{3}{6}$

07. 



இவ்வுருவில் காணப்படும் பகுதியின் சுற்றளவு யாது?

1) 24 cm　　2) 30 cm　　3) 28 cm





23. பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற விளையாட்டு விழாவின் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது.

| நேரம் | நிகழ்ச்சி |
|---|---|
| 08:00 | தேசியக்கொடி ஏற்றல் |
| 08:30 | 50 மீற்றர் ஓட்டம் (12 வயதுக்குக்கீழ் - ஆண்கள்) |
| 09:45 | உடற்பயிற்சிக் கண்காட்சி |
| 11:45 | நீளம் பாய்தல் (15 வயதிற்குக் கீழ் - பெண்கள்) |
| 13:00 | அஞ்சல் ஓட்டம் |
| 14:45 | 100 மீற்றர் ஓட்டம் (15 வயதிற்குக் கீழ் - |

நிகழ்ச்சி நிரலின்படி கீழுள்ள வினாக்களிற்கு விடை தருக.

1) 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சி இடம்பெற்ற நேரத்தை 12 மணித்தியாலக் கடிகார (சாதாரண கடிகார) நேரமாகத் தருக. ........................................

2) உடற்பயிற்சிக் கண்காட்சி ஆரம்பித்து எவ்வளவு நேரத்தின் பின்னர் அஞ்சலோட்டம் ஆரம்பித்தது?

........................................

24. தசம எண்ணாக எழுதுக.


1) $4\frac{7}{10}$ = ....................　　2) $\frac{50}{100}$ = ....................

25. முகுந்தனிடம் இருந்த பணத்தின் $\frac{3}{8}$ நந்தனிடமிருந்தது. நந்தனிடம் இருந்தது ரூ 30 எனின், இருவரிடமும் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு? ரூ ....................

26. பின்னங்களைக் கழிக்குக. $\frac{1}{3} - \frac{1}{6} =$ ....................

27. ஒன்றில் 36 பலூன்கள் வீதம் உள்ள 4 பெட்டிகளும், ஒன்றில் 26 பலூன்கள் வீதம் உள்ள 5 பெட்டிகளும் இருந்தன. 9 பெட்டிகளிலும் உள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?

....................

28. 

இந்தத் திண்ம உருவில் காணப்படும்

1) தட்டையான மேற்பரப்புகள் எத்தனை? ....................

2) விளிம்புகள் எத்தனை? ....................

29. ஒன்று 250 கிராம் நிறையுடைய 5 பால்மாப்பைக்கற்றுக்களும், ஒன்று 750 கிராம் நிறையுடைய 4 பால்மாப்பைக்கற்றுக்களும் இருந்தன. பால்மாப்பைக்கற்றுக்களின் மொத்த நிறை யாது?

.................... கிலோகிராம் .................... கிராம்

30. 408 பலூன்கள் 4 வகுப்புகளிற்கு சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. ஒரு வகுப்பிற்கு கொடுக்கப்பட்ட பலூன்கள் எத்தனை? ....................

- **31 - 60 வரையுள்ள வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

31. நீரில் மாத்திரம் வாழும் விலங்கு
1) ஆமை　　2) இறால்　　3) தவளை　　4) வாத்து

32. மண்ணரிப்பு ஏற்படுவதில் பின்வரும் எச்செயல் செல்வாக்குச் செலுத்துகிறது?
1) காடுகளை வெட்டுதல்　　2) மரங்களை வெட்டுதல்
3) புற்களை வளர்த்தல்　　4) கல்வேலியை அமைத்தல்

33. கொன்றைப் பூ எந்த மாதத்தில் பூக்கும்?
1) தை　　2) மாசி　　3) சித்திரை　　4) பங்குனி

34. தரப்பட்ட தாவரங்களில் விலங்குகளில் தங்கியிருக்கும் தாவரம்
1) துளசி　　2) சீதேவியார் செங்கழுநீர்
3) கெண்டித்தாவரம்　　4) குப்பைமேனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. தரப்பட்ட பிராணிகளில் வேறுபட்ட பிராணி எது?
1) வெட்டுக்கிளி 2) சிலந்தி 3) கரப்பான் 4) தேனீ

36. பயிர்களுக்கு தீங்கு செய்யும் சிறு பிராணிகளை இல்லாது ஒழிக்கப் பயன்படும் நவீன முறை
1) முசுறு எறும்பின் கூட்டைப் பேணுதல் 2) கிருமி நாசினிகளைத் தெளித்தல்
3) பொலித்தீன் பைகளால் மூடுதல் 4) அவற்றின் கூடுகளை அழித்தல்

37. தரப்பட்ட தாவரங்களில் ஆணிவேர் உள்ள தாவரம்
1) தென்னை 2) கித்துள் 3) பனை 4) பப்பாசி

38. ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் காய்க்கும் பழம்
1) பப்பாளி 2) முந்திரிகை 3) வாழை 4) கொய்யா

39. காற்றின் மூலம் பரவும் வித்துக்களில் அடங்காதது?
1) எருக்கலை 2) எண்ணெய் 3) வேம்பு 4) காசித்தும்பை

40. கிழங்குத்தண்டை நடுவதன் மூலம் புதிய தாவரத்தைப் பெறக்கூடியது?
1) இஞ்சி 2) கங்குன் 3) வெங்காயம் 4) மரவள்ளி


41. இலங்கையில் உள்ள நதிகளில் அதிக நீரைக் கடலுக்குள் சேர்க்கும் நதி
1) வளவை கங்கை 2) களனிகங்கை 3) களுகங்கை 4) மகாவலிகங்கை

42. பூக்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ உதவும் விலங்கின் நடத்தை
1) ஆடு மாடுகள் தோட்டங்களில் மலசலங் கழித்தல்
2) ஆந்தை தேவாங்கு போன்றவை தாவரங்களில் இரவைக் கழித்தல்
3) தேனீக்கள் பூக்களில் அமுதம் பருகுதல்
4) செவ்வெறும்புகள் தாவரங்களில் கூடமைத்தல்

43. மின்காந்தம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான பொருட் தொகுதி
1) இரும்பாணி, செம்புக்கம்பி, மின்குமிழ், உலர்மின்கலம்
2) உலர்மின்கலம், செப்புக்கம்பி, இரும்பாணி, குண்டூசி
3) உலர்மின்கலம், காந்தக்கோல், மின்குமிழ், செப்புக்கம்பி
4) காந்தக்கோல், செப்புக்கம்பி, குண்டூசி, இரும்பாணி

44. படலையுடன் கூடிய (பாதுகாப்புடைய) புகையிரதக் கடவை முன்னால் என்பதைக் குறிக்கும் விதிக்குறியீடு

1) 2) 3) 4)



45. காந்தக்கோல் ஒன்றின் சரிமத்தியில் நூலைக் கட்டித் தொங்கவைத்து காந்தத்தைச் சுயாதீனமாக அசைய விட்ட பின் அது ஓய்வுக்கு வரும்போது அதன் முனைகள் காட்டி நிற்கும் திசை
1) கிழக்கு, மேற்கு 2) வடமேற்கு, தென்கிழக்கு
3) வடகிழக்கு, தென்மேற்கு 4) வடக்கு, தெற்கு

46. தேசிய இலச்சினையில் பூ இதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் குறிப்பது
1) தன்னிறைவை 2) சௌபாக்கியத்தை
3) நிலைத்திருத்தலை 4) நாட்டையும் கட்டுப்பாடான நாட்டுமக்களையும்

47. விதானம் போன்று (குடை போன்று) காணப்படும் மரக்கிளைகளால்
1) மண்ணரிப்பு ஏற்படும் 2) மண்ணரிப்பு தடுக்கப்படும்
3) மண்வளம் குன்றும் 4) வரட்சி அதிகரிக்கும்

48. ஈஸ்டர் தினத்தைக் கொண்டாடும் சமயத்தவர்கள்
1) கிறிஸ்தவர்கள் 2) பௌத்தர்கள் 3) இந்துக்கள் 4) முஸ்லிம்கள்

49. 'புள்ளிக்கோட்டு' என்பது இலங்கைக்கே உரித்தான ஒரு
1) பறவையினம் 2) மீனினம் 3) மர அணில் 4) வண்ணத்துப்பூச்சி





50. அநுராதபுரம் பற்றிய கூற்றுக்களில் பிழையானது.
1) பண்டைய இலங்கையின் முதலாவது தலைநகர்
2) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதநகர்
3) வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நகர்
4) பராக்கிரம சமுத்திரம் காணப்படும் நகர்

51. இலங்கையின் அமைவைச் சரியாகக் காட்டுவது

1) 2) 3) 4)



52. இலங்கையின் பண்டைய இராசதானி அல்லாதது
1) அநுராதபுரம் 2) மாத்தளை 3) பொலன்னறுவை 4) யாப்பகுவ

53. பதுளை, மொனறாகலை ஆகிய இரு மாவட்டங்களையும் உள்ளடக்கிய மாகாணம்
1) ஊவா 2) சப்ரகமுவ 3) வடமேல் 4) வடமத்தி

54. இலங்கையின் மலைப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் நகரம்
1) அப்புத்தளை 2) புத்தளம் 3) மன்னார் 4) காங்கேசன்துறை

55. நுளம்புகளை விரட்டுவதற்கு எரித்து புகையூட்டப்படும் தாவர இலை
1) துளசி 2) அகத்தி 3) ஆவரசு 4) கள்ளி

56. மன்னன் தாதுசேனனால் அமைக்கப்பட்டவை,
1) திசாவாவி, யோதவாவி 2) கலாவாவி, யோதவாவி
3) கிரித்தலைக்குளம், திசாவாவி 4) கந்தளாய்க்குளம், கிரித்தலைக்குளம்

57. ஏதேனும் ஒன்றை இறுக்கமாகப் பிடிக்கவும், கம்பிகளை வெட்டவும் பயன்படுத்தப்படும் உபகரணம்

1) 2) 3) 4)




58. கைக்குட்டையில் பூவைத் தைக்கும் போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை
1) வெட்டுக்குத்துத்தையல் 2) நரம்புத்தையல்
3) கம்பளித்தையல் 4) விளிம்புத்தையல்

59. 'ஒடுக்கமான பாலம் முன்னால்' என்பதைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உருவைக் குறியீடு

1) 2) 3) 4)



60. காட்டப்படும் விநோத விளையாட்டு



1) பொருளை சேகரிப்போம்
2) தேன்வதை எடுப்போம்
3) கூடையை நிரப்புவோம்
4) துரத்திச் செல்வோம்



**தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள்கள் ஜன.14,15,16 வெளியான வினாக்களுக்கான விடைகள் 2 ஆம் பக்கத்தில்**

2 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் தற்கொலைப்படைத் தாக்குதல்

நைஜர்,ஜன.19

**ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் இயங்கி வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 12 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.**




ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் குழு இயங்கி வருகின்றது. நைஜீரியா மட்டுமல்லாது அண்டை நாடுகளிலும் இந்தக் குழு பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த நிலையில், நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மைதுகுரி பகுதியில் உள்ள சந்தையில் நேற்று முன்தினம் இரண்டு தீவிரவாதிகள் தங்களது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தனர்.

இந்தக் கோரத் தாக்குதலில் 12 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். 48 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பள்ளி மாணவிகள் கடத்தப்பட்ட வீடியோவை இந்த இயக்கம் நேற்று முன்தினம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேட்டி அணிந்து பாரம்பரிய முறையில் பொங்கல் கொண்டாடிய கனடா பிரதமர்



ஒட்டாவா,ஜன.19

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வேட்டி அணிந்து பாரம்பரிய முறையில் தமிழ் சமூக மக்களுடன் இணைந்து பொங்கல் கொண்டாடினார்.

கனடாவில் 2016ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி ஒரு லட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் தமிழ் மக்கள் வசித்து வருகின்றனர். அந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கனடா நாடாளுமன்றம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் தமிழ் பாரம்பரிய மாதமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் கனடாவில் உள்ள தமிழ்ச் சமூக மக்களுடன் இணைந்து பிரதமர் ஜஸ்டின் பொங்கல் பண்டிகை கொண்டாடினார். அப்போது, தமிழ் பாரம்பரிய ஆடையான வேட்டி அணிந்து பொங்கல் வைத்தார்.

இவ்விழாவில் டோரண்டோ மாநகர மேயர் ஜோன் டோரியும் கலந்து கொண்டார். ஜஸ்டின் மற்றும் ஜோன் இணைந்து பொங்கல் சமைத்தனர். பின்னர் ஜஸ்டின் தமிழ் மக்களிடையே பேசினார். அவர்களுக்கு பொங்கல் வாழ்த்துக்கள் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் போது எடுத்த புகைப்படத்துடன் பொங்கல் வாழ்த்துகளையும் டுவிட் செய்துள்ளார். அதில் அனைவருக்கும் இனிய தைபொங்கல் மற்றும் தமிழ் பாரம்பரிய மாத வாழ்த்துக்கள் என தமிழில் தெரிவித்துள்ளார். இந்த விழாவில் கலந்து கொண்டமை மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ப)

# இந்தியாவுடன் போர் கிடையாது

## பாகிஸ்தான் பிரதமர் சூசகம்



இஸ்லாமாபாத்,ஜன.19

பாகிஸ்தான் ஒருபோதும் வலியப்போய் தாக்குதல்கள் நடத்தாது எனவும், எப்போதுமே பேச்சுக்குத் தயாராக உள்ளது எனப் பாகிஸ்தான் பிரதமர் ஷாகித் அப்பாசி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பாகிஸ்தான் தொடர்ந்து எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்து, முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்துவதற்குப் பக்க பலமாக இருந்து வருகிறது. எல்லையில் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறித் தாக்குதல்களிலும் ஈடுபட்டு வருகின்றது. இதன் காரணமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. எல்லையில் தொடர்ந்து பதற்றமான சூழல் உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் பிரதமர் ஷாகித் அப்பாசி அளித்த பேட்டியில்,

பாகிஸ்தான் ஒருபோதும் வலியப்போய் தாக்குதல்கள் நடத்தாது. எப்போதுமே பேச்சுக்குத் தயாராக உள்ளது. ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் சமரசம் செய்து கொள்ளாமல், மரியாதையின் அடிப்படையில் பேச்சு அமைய வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும், இந்தியாவுக்குப் பல நோக்கங்கள் இருக்கலாம். ஆனால் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோடு நிலவரத்தை உணர வேண்டும் என்றும் கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள 30 லட்சம் ஆப்கானிஸ்தான் அகதிகள் நாடு திரும்புவதற்கு உலக நாடுகள் உதவவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். 5 ஆண்டு கால சிறப்பான ஆட்சிச் செயற்பாடுகள், முன் எப்போதும் இல்லாத வகையில் அமைந்த வளர்ச்சிப்பணிகள் அடிப்படையில் அடுத்த ஆண்டு பொதுத்தேர்தலைச் சந்திப்போம் என்றும் தெரிவித்துள்ளார். (ப)

# மெக்சிக்கோவில் மிகப்பெரிய நீர்வழிக் குகை கண்டுபிடிப்பு

மெக்சிக்கோவில் 347 கிலோ மீற்றர் நீளமுள்ள உலகின் மிகப் பெரிய நீர்வழிக் குகையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மெக்சிக்கோவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கிழக்குக் கடற்கரையில் உள்ள துலிம் விடுதிக்கு அருகில் புதிய நீர்வழிக் குகை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். 347 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்தக் குகை உலகின் மிகப்பெரிய நீர்வழிக் குகை எனக் கூறப்படுகிறது.

இந்தக் குகை மாயன் இன மக்கள் பயன்படுத்தியது எனத் தெரிகிறது. இதன்மூலம் 15ஆம் நூற்றாண்டிற்கு முன் அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பாரம்பரியம், வழிபாட்டு முறை போன்றவற்றை அறியலாம்.

கிரான் அக்குபெரா மாயா என்ற ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக இந்த குகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சக் அக்டன் என்ற அமைப்பு இந்தக் குகையைக் கண்டுபிடித்துள்ளது.



இது மிகவும் ஆச்சரியமான கண்டுபிடிப்பு என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ப)

# பழுங்கால டைனோசரின் 180 கிலோ வால் ஏலத்தில்!

16 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசரின் 180 கிலோ எடையுள்ள பதப்படுத்தப்பட்ட வால் ஒன்று மெக்சிக்கோவில் நேற்று முன்தினம் ஏலத்துக்கு வந்தது. லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தாக்கிய இரு நில நடுக்கங்களால் மெக்சிக்கோவில் 480 பேர் உயிரிழந்தனர்.



சுமார் 5 ஆயிரம் பாடசாலைகள் கடுமையாகச் சேதமடைந்தன. இவற்றைச் சீரமைக்க நிதி திரட்டுவதற்காக சுமார் 16 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மொராக்கோ நாட்டின் மலைப்பகுதியில் வாழ்ந்தது எனக் கண்டுபிடிக்கப்பட்ட 56 அடி நீளமும், 22 ஆயிரம் கிலோ எடையும் கொண்ட அரியவகை டைனோசரின் பதப்படுத்தப்பட்ட 4 அடி நீளம்கொண்ட வால் ஒன்று ஏலத்தில் விட தீர்மானிக்கப்பட்டது.

# கிளர்ச்சிக்குழுவின் ஏவுகணையை இடைமறித்து அழித்தது சவுதி

ஜெட்டா,ஜன.19



ஏமனில் அரசுப்படைகளுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஹவுதி குழுவினர் வீசிய ஏவுகணையை இடைமறித்து அழித்து விட்டோம் என சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

ஏமனில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில், அரசுப் படைகளுக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும், ஹவுதி கிளர்ச்சியாளர் குழுவுக்கு ஆதரவாக ஈரானும் செயற்பட்டு வருகின்றன. சவுதியைக் குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பல முறை ஏவுகணைகளை ஏவியுள்ளனர். ஆனால், அதனைச் சவூதி இடை மறித்து அழித்துள்ளது.

இந்த நிலையில், சவுதி அரேபியாவின் தெற்கு ஜிசான் பிராந்தியத்தை நோக்கி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழுவினரால் ஏவப்பட்ட ஏவுகணை சவுதிப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதனை சவுதி அரசு தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.

ஏவுகணைகள் மற்றும் நிபு ணத்துவங் களை ஹவுதி குழுவினருக்கு ஈரான் வழங்குகின்றது எனச் சவுதி அரேபியா குற்றம் சாட்டுகிறது. ஆனால், ஈரான் இதனை மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாம் வீட்டிலிருந்து அரசியல் பயணத்தை தொடங்கவுள்ளார் கமல்

சென்னை,ஜன.19

ராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாம் வீட்டில் இருந்து நடிகர் கமலஹாசன் எதிர் வரும் 21ஆம் திகதி அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.



நடிகர் கமலஹாசன் ஜனவரி 16ஆம் திகதி நள்ளிரவில் தனது அரசியல் பயணத்தை பெப்ரவரி 21ஆம் திகதி தொடங்குகிறேன் என அறிவிப்பு வெளியிட்டார். அவர் பிறந்த ராமநாதபுரத்தில் கட்சியின் பெயரை அறிவிக்கவுள்ளார்.

ஆரம்பக்கட்ட சுற்றுப்பயணத்தில் மதுரை, ராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்ட மக்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார் எனத் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

கலாமிற்கு பல கனவுகள் இருந்தன. அவரைப் போல பல கனவுகள் கொண்டவன் நான். விமர்சிப்பது மட்டும் என் வேலையன்று. நான் இறங்கி வேலை செய்ய வந்தவன் எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர், திராவிடம் என்பது தமிழ்நாடு தழுவியது மட்டுமல்ல. அது நாடு தழுவியது. மிகப்பெரிய சரித்திரமும், தொல்பொருள் ஆராய்ச்சியும் திராவிடத்தில் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (ப)

## கவிஞர் வைரமுத்துவின் நாக்கை அறுத்தால் ரூ.10 கோடி சன்மானம்

நெல்லை,ஜன.19

வைரமுத்துவின் நாக்கை அறுத்தால் 10 கோடி ரூபா தரவும் தொண்டர்கள் தயாராக உள்ளனர் என பா.ஜ.க. மாநிலத் துணைத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஆண்டாள் தொடர்பாக கவிஞர் வைரமுத்து தவறுதலான கருத்து தெரிவித்தமைக்க எதிர்ப்புத் தெரிவித்தும், அந்த கருத்துக்கு அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்துக்கள் தரப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நெல்லையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசுகையில், கவிஞர் வைரமுத்துவின் நாக்கை அறுத்தால் 10 கோடி ரூபா தரவும் தொண்டர்கள் தயாராக உள்ளனர்.

வருங்காலங்களில் இந்துக்களைப் பழித்துப் பேசினால் கொலைசெய்யவும் தயாராகுங்கள் எனப் பேசிஉள்ளார். இது பெரும் சர்ச்சையாகி உள்ளது.

ஆர்.கே.நகர் தோல்வியை மறைக்கவே, வைரமுத்து போன்றோரை தி.மு.க. தூண்டிவிடுகிறது எனவும் குற்றம் சாட்டியுள்ளார்

# தேர்தல் ஆணையகத்தின் தீர்ப்பை பொறுத்தே புதிய கட்சி ஆரம்பம்

சென்னை,ஜன.19

தற்போதைய சூழலில் அ.தி.மு.க.-அம்மா எனும் பெயரில் செயற்படப் போகிறேன் எனவும், தேர்தல் ஆணையத்தின் வழக்கில் எதிர்பார்க்கும் முடிவு கிடைக்காவிட்டால் புதிய கட்சி தொடங்குவேன் என்றும், டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.




ஆர்.கே.நகர் தொகுதியில் மக்கள் அளித்த தீர்ப்பு, அ.தி.முகாவின் 90 வீதத் தொண்டர்கள் இன்னமும் சசிகலாவின் ஆதரவாளர்களாகவே தொடர்கின்றனர் என்பதை நிரூபித்துள்ளது. இதையடுத்தே கட்சியையும், சின்னத்தையும் மீட்கச் சட்ட வல்லுநர்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறேன்.

இதுதொடர்பாகக் கட்சியின் தலைமை நிர்வாகிகளிடமும், மாவட்ட செயலர்களிடமும் நடத்தப்பட்டும் ஆலோசனைகளின் முடிவுகளைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை தீர்மானிக்கப்படும்.

18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம், அரசுக்கு எதிராக ஓ.பி.எஸ். தலைமையிலான 11 உறுப்பினர்கள் வாக்களிப்பு, டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில் சசிகலாவை பொதுச் செயலராகத் தேர்வு செய்தமை உள்ளிட்டவை தொடர்பான பல்வேறு வழக்குகளில் விரைவில் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதில் தேர்தல் ஆணையகம் எடுக்கும் நடவடிக்கையைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒருவேளை தேர்தல் ஆணையகத்தின் தீர்ப்பு எங்களுக்கு எதிராக அமைந்தால், புதிய கட்சி தொடங்கப்படும். அதுவரை அ.இ.அ.தி.மு.க.-அம்மா என்ற பெயரிலேயே கட்சி நடவடிக்கைகள் தொடரும்.

புதிய கட்சி தொடங்கப்பட்டாலும், வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் எங்கள் கட்சியே வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தினகரன், திவாகரன் ஆகியோர் கைதுசெய்யப்பட வேண்டும்

### அமைச்சர் ஜெயக்குமார்

ஜெயலலிதா மரணத்தை வைத்து விளம்பரம் தேடுகின்ற மலிவான செயலில் ஈடுபடும் தினகரன், திவாகரன் ஆகியோரைக் கைது செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

அமைச்சர் ஜெயக்குமார் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு–

ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை ஆணையகம் அமைத்த பிறகு யாராக இருந்தாலும் விசாரணை ஆணையகத்தில்தான் தகவல் சொல்ல வேண்டும். அதை விடுத்து வெளியே சொல்வது மிகப்பெரிய குற்றம்.

ஜெயலலிதாவை வைத்து விளம்பரம் தேடுகின்றமையிலான செயற்பாட்டில் செயலில் திவாகரனும், தினகரனும் ஈடுபடுகிறார்கள். எனவே, விசாரணை ஆணையகம் தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்து திவாகரனையும், தினகரனையும் கைதுசெய்து உண்மைகளைக்கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## அரசியலில் கூட்டாகச் செயற்பாடு: ரஜனி கருத்தை வழிமொழிகிறேன்

கமலஹாசனுடன் இணைந்து செயற்படுகின்றமை தொடர்பாகக் காலம் முடிவுசெய்யும் என ரஜனிகாந்த் கூறியிருந்த நிலையில், அந்தக் கருத்தை வழிமொழிகிறேன் எனக் கமலஹாசன் தெரிவித்துள்ளார்.




நடிகர் ரஜனிகாந்த் தனது அரசியல் பிரவேசம் தொடர்பாகக் கடந்த ஆண்டு இறுதியில் அறிவித்தார். தனது ரசிகர் மன்றம் மூலமாக கட்சிப் பணிகள் குறித்து மும்முரமாக அவர் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில், நடிகர் கமலஹாசன் பெப்ரவரி 21ஆம் திகதி கட்சியின் பெயரை வெளியிட்டுத் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய உள்ளேன் என அறிக்கை வெளியிட்டுள்ளார்.

புதிய கட்சி தொடங்கவுள்ளேன் என அறிவித்த கமலஹாசனுக்கு எனது வாழ்த்துக்கள் என்று கூறிய ரஜனிகாந்த், கமலுடன் கூட்டணி வைப்பீர்களா? என்ற கேள்விக்கு, காலம் தான் பதில் சொல்லும் என்றும் கூறினார். மேலும், எப்போது தேர்தல் வந்தாலும் சந்திப்பேன் என்றும் ரஜனி கூறியிருந்தார்.

இந்தநிலையில், ரஜனியின் கருத்தை வழிமொழிகிறேன் எனக் கமல்ஹாசனும் தெரிவித்துள் ளார். ஆன்மீக அரசியல் என்பது ரஜனியின் நம்பிக்கை. எனது அரசியல் வேறு. மக்கள் தங்களின் பலத்தை உணரச் செய்ய வேண்டும் என்பதே எனது ஆசை. மக்கள் பிரச்சினையை மக்களிடமே எடுத்துச் செல்வதற்கே சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளேன் என்று அவர் பேட்டியளித்துள்ளார்.

# 'ஜெ' மரணம் தொடர்பான சர்ச்சைகள் துரதிஷ்டமானவை

சென்னை,ஜன.19

ஜெயலலிதா மரணமடைந்தமை பற்றித் தேவையில்லாத குழப்பங்கள் பரவுகின்றமை துரஷ்டவசமானது என்றும் கடந்த 2016ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதிதான் ஜெயலலிதா மரணமடைந்தார் என்றும் அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.




மன்னார்குடியில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசிய சசிகலா சகோதரர் திவாகரன், 2016 டிசெம்பர் 4ஆம் திகதி மாலை 5.15 மணிக்கே மாரடைப்பால் ஜெயலலிதா இறந்தார் என்று கூறியிருந்தார். அப்பலோ மருத்துவமனைகளின் கிளைகளைக் காப்பாற்றுவதற்காக ஒருநாள் காத்திருந்து ஜெயலலிதாவின் மரணத்தை அறிவித்தனர் என்றும் கூறியிருந்தார் திவாகரன். இந்தத் தகவல் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியது. யாருடைய அழுத்தம் காரணமாக இது நிகழ்ந்தது என்ற கேள்வியும் எழுந்தது.

இந்த நிலையில், ஜெயலலிதா மரணம் தொடர்பாக அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் புதிய விளக்கம் ஒன்றை அறிவித்துள்ளது. அப்பலோ மருத்துவமனை அளித்த விளக்கத்தில், ஜெயலலிதா 2016ஆம் ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி தான் உயிரிழந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரணம் பற்றியும் உயிரிழந்த திகதி, நேரம் பற்றியும் தவறான தகவலைக் கூறித் தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்துவது துரதிஷ்டவசமானது. ஜெயலலிதா மரணம் தொடர்பாக ஆறுமுகசாமி ஆணையம் விசாரித்து வருகிறது.

ஜெயலலிதாவுக்கு சிகிச்சையின் போது மருத்துவமனையில் அனைத்து விதிமுறைகளும் முறையாகப் பின்பற்றப்பட்டன. ஜெயலலிதா மரணமடைந்தமை துரதிஷ்டவசமானது என்றும் அப்பலோ மருத்துவமனை விளக்கம் அளித்துள்ளது.

ஜெயலலிதாவிற்கு அளித்த சிகிச்சை பற்றி அப்பலோ மருத்துவமனை சார்பில் ஏற்கனவே ஆறுமுகசாமி விசாரணை ஆணையகத்தில் இரண்டு சூட்கேஸ்களில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையுடனான போட்டிகள்

# தேவையில்லாத நேரம் விரயம்

### பிஷன் சிங்பேடி காட்டம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கு தயாராகாமல் இலங்கைக்கு எதிரான தொடர் தேவையில்லாத நேரம் விரயம் என முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் பிஷன் சிங் பேடி குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான செஞ்சூரியன் டெஸ்டில் இந்தியா 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்திய வீரர்கள் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியால் திணறினார்கள். இதற்கு முக்கிய காரணம் இந்தியா தென்னாபிரிக்கா தொடருக்கு தயாராகவில்லை என்பதுதான்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்ட் தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் இந்திய அணி அங்கு சென்றது. ஒரு பயிற்சி ஆட்டத்தில் கூட விளையாடவில்லை. மாறாக, தென்னாபிரிக்கா தொடருக்கு முன் இந்தியா இலங்கையுடன் மூன்று டெஸ்ட், மூன்று ஒருநாள் மற்றும் மூன்று ரி-20 கிரிக்கெட் போட்டியில் விளையாடியது.

இந்திய அணி எந்தவொரு நிலையிலும் தங்களைத் தயார்ப்படுத்தவில்லை. இலங்கையுடன் விளையாடிய நம்முடைய நேரம் வீண் விரயம். தென்னாபிரிக்காவிற்காகத் தயாராகும் நிலையில் ஒன்றரை மாதமாக வலுவிழந்த அணியுடன் மோதியல் எந்த அர்த்தமும் இல்லை. ஒரு கடினமான தொடருக்கு செல்வதற்கு முன் தயார்ப்படுத்துவது அவசியமானதாகும்.- என்று தெரிவித்துள்ளார்.





## மோசமான சாதனையை பதிவு செய்த புஜாரா

இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 165 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ஒரே டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸிலும் ரன் அவுட் ஆன முதல் இந்திய வீரர் என்ற மோசமான சாதனையை புஜாரா பதிவு செய்துள்ளார்.

புஜாரா முதல் இன்னிங்ஸின் 10ஆவது ஓவரின் 4ஆவது பந்தில் களமிறங்கினார், முதல் பந்தை அடித்து விட்டு ஓட்டங்கள் எடுக்க ஓடினார். களத்தடுப்புச் செய்த நிகிடி இலக்கைக் குறிபார்த்து சரியாக எறிந்தார். இதனால் தான் சந்தித்த முதல் பந்திலேயேஓட்டம் ஏதும் எடுக்காமல் ரன் அவுட் மூலம் ஆட்டமிழந்தார்.

4 நாள் முடிவில் 2ஆவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா இந்தியாவின் வெற்றிக்கு 287 இலக்காக நிர்ணயித்தது. இதைத் தொடர்ந்து ஐந்தாம் நாள் ஆட்டத்தை தொடங்கிய இந்திய அணியில் புஜாரா 11 ஓட்டங்களுடனும், பார்தீவ் பட்டேல் 5 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

27ஆவது ஓவரின் முதல் பந்தை பார்தீவ் பட்டேல் பவுண்டரி எல்லையை நோக்கி அடித்தார், அதை நிகிடி தடுத்துவிட்டார். பின்னால் வந்த டி வில்லியர்ஸ் பந்தை விக்கெட் கீப்பரை நோக்கி வேகமாக வீசினார்.

அதேவேளையில், புஜாரா 3ஆவது ஓட்டத்தை ஓடும் போது விக்கெட் காப்பாளர் குயின்டான்டி கொக் ரன் அவுட் செய்தார். இதனால் புஜாரா 19 ஓட்டங்களில் மீண்டும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

இதன்மூலம் இந்தியடெஸ்ட் போட்டி வரலாற்றில் விளையாடிய இரு இன்னிங்ஸிலும் ரன் அவுட் ஆன முதல் வீரர் எனும் கசப்பான சாதனையைப் புஜாரா படைத்துள்ளார்.

# ஐ.ஸி.ஸியின் சிறந்த வீரராக கோஹ்லி தேர்வு

ஐ.ஸி.ஸி. தரவரிசையில் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த கிரிக்கெட் வீரராக இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.ஸி.ஸி.) 2017ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் விருதுகளை நேற்று முன்தினம் அறிவித்தது. இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோஹ்லி சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆகிய இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளார். மேலும் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான சர் கார்பீல்ட் சாபர்ஸ் டிராபி விராட் கோஹ்லிக்கு வழங்கப்படவுள்ளது.

ரி-20 போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்ட இந்திய வீரர் யுஸ்வேந்திர சாஹலுக்கு, சிறந்த வீரருக்கான ஐ.ஸி.ஸி. விருது வழங்கப்படவுள்ளது.

சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீராக ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணிக் கப்டன் ஸ்டீவ் சுமித் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



# குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்காக 550 பேரை அனுப்பும் வடகொரியா



தென்கொரியா நாட்டின் பியங்சாங் நகரில் அடுத்த மாதம் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க வடகொரியாவில் இருந்து 550 பேர் கொண்ட குழுவை அனுப்பிவைக்க வடகொரியா சம்மதம் தெரிவித்துள்ளது.

தென்கொரியா நாட்டின் பியங்சாங் நகரில் வரும் பெப்ரவரி 9ஆம் திகதி தொடக்கம் 25ஆம்திகதிவரை குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. தென்கொரியாவின் தீவிர பகை நாடான வடகொரியா இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்குமா? என்ற எதிர்பார்ப்பு மேலோங்கிய நிலையில் புத்தாண்டு அன்று தொலைக்காட்சியில் உரையாற்றிய வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், தென்கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு வடகொரியா தனது அணியை அனுப்பும் எனத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக, விரிவான பேச்சு நடத்துவதற்காக இரண்டாண்டுகளாக துண்டிக்கப்பட்டிருந்த தென்கொரியா நாட்டுடனான ஹொட்லைன் தொலைபேசி வசதியை இருநாடுகளின் எல்லைப்பகுதியில் வடகொரியா சமீபத்தில் மீண்டும் தொடங்கியது.

பியங்சாங் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில் கலந்து கொள்ள 140 பேர் கொண்ட கலைக்குழுவை அனுப்பிவைக்க கடந்த 15ஆம் திகதி வடகொரியா சம்மதம் தெரிவித்தது.

இந்த நிலையில், டேக்வான்டோ தற்காப்புக்கலை வீரர்கள் 30 பேரை கொண்ட குழு, மாற்றுத்திறனாளிகள் போட்டிகளுக்கான 150 வீரர்-வீராங்கனைகள் மற்றும் 230 சீர்லீடர்ஸ் அடங்கிய குழு என மொத்தம் 550 பேர் கொண்ட குழுவை தென்கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அனுப்பிவைக்க வடகொரியா நேற்று சம்மதம் தெரிவித்துள்ளது. (ப)

# என்னுடன் பண்டையாவை ஒப்பிடாதீர்கள் – கபில்தேவ்





இந்திய அணி வீரர் ஹார்திக் பண்டையாவை தன்னுடன் ஒப்பிட வேண்டாம் என இந்திய அணியின் முன்னாள் வீரரான கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

பண்ட்யாவிடம் நிச்சயம் திறமை இருக்கிறது, தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியிலேயே அதைக் காண முடிந்தது. ஒவ்வொரு போட்டிக்கும் உளவியல் ரீதியாக அவர் தயாராக வேண்டும், தேவையற்ற உத்தியைப்பயன்படுத்தி விக்கெட்டுகளை இழக்கும் பட்சத்தில் பண்டையாவை என்னுடன் ஒப்பிட வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பண்டையா மோசமாக விக்கெட்டை பறிகொடுத்தார் எனவும் விமர்சித்துள்ளார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

லஞ்ச, ஊழல் ஆணைக்குழு அவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்கை நேற்று விசாரித்த கொழும்பு பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டார, அழைப்பாணை பிறப்பிப்பதற்கான இந்த உத்தரவை வழங்கினார்.

'லங்கா எலக்ட்ரிசிற்றி கொம்பனி (தனியார்) நிறுவனத்துக்கு சொத்துக்கள் வாங்கியதில் ஊழல், முறைகேடுகள் இடம்பெற்றிருந்தன இரண்டு விசாரணைக் குழுக்களினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது எனக் கூறப்படுகின்றது.

எனினும் சம்பவத்தில் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காதிருந்தமை மூலம், அப்போதைய சட்டமா அதிபராக இருந்த மொஹான் பீரிஸ் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அப்போதைய சொலிசிஸ்டர் ஜெனரலாக இருந்த ஏ.எச்.எம்.பீ. நவாஸ் ஆகியோரால் லஞ்ச, ஊழல் சட்டத்தின் கீழ் தவறிழைக்கப்பட்டிருப்பதாக, லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகையில் 20 சாட்சியாளர்களின் பெயர்களும், 19 சாட்சிப் பொருள்களும் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டார நாயக்கா சர்ச்சைக்குரிய முறையில் அப்பதவியிலிருந்து துரத்தப்பட்ட போது அந்த இடத்துக்கு புதிய நீதியரசராகப் பொறுப்பேற்றவர் அதுவரை சட்டமா அதிபராக இருந்த மொஹான் பீரிஸே ஆவார்.

மஹிந்த ராஜ பக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட தினத்தில் - 2015 ஜனவரி 9 ஆம் திகதி அதிகாலையில் அப்போது பிரதம நீதியரசராக இருந்த இவர், ஜனாதிபதி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷவுடன் இருந்தார் என்று கூறப்பட்டது.

புதிய அரசு பதவியேற்ற கையோடு இவர் இந்தப் பதவியிலிருந்து விலகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## நீர்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையர்கள் குழு, இளம் குடும்பஸ்தர் ஒருவரையும் அவரது சகோதரனையும் தாக்கிவிட்டு 15 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

அந்த வீட்டுக்கு அயலிலுள்ள மற்றொரு வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் அங்கு வசித்த வயோதிபத் தம்பதியரைத் தாக்கிவிட்டு நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டுத் தப்பித்தது. வயோதிபத் தம்பதிகளுக்குத் துணையாக அவர்களது மகன் தினமும் இரவில் அங்கு சென்று தங்குவார். எனினும் நேற்றிரவு அவர் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் அவசர சேவைக்கு அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் கோப்பாய் பொலிஸார் நேற்று அதிகாலை 2.30 மணிக்கு சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் கூட மதுபானச் சாலைகளில் பெண்கள் பணி புரியவும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மதுபானச் சாலைகளில் மதுபானம் வாங்கவும், மதுபானசாலைகளை நேரத்துடன் திறந்து, இரவில் காலம் பிந்தி மூடவும் அனுமதிக்கும் விதத்தில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்துப் பத்திரிகையில் வாசித்தே தாம் அறிந்து கொண்டார் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

லொட்டரி டிக்கெட்டின் விலை அதிகரிப்புப் பற்றிய அறிவித்தலைக் கூடப் பத்திரிகையைப் பார்த்தே தாம் அறிந்து கொண்டார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னர் கூறியிருந்தார்.

இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவரிடம் ஹாஸ்யமாகப் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

*"அரசில் நடப்பவை என்ன வென்பது அரசுத் தலைவரான ஜனாதிபதிக்குத் தெரியவில்லையாம். பல விடயங்களை அவர் பத்திரிகைகளில் வாசித்துத்தான் அறிய வேண்டிய நிலைமை என்பது வெட்கக் கேடானது.*

*"இந்த அரசைப் புரட்டுவதற்கு நாங்கள் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், மக்கள் எழுச்சிகளை நடத்தத் தேவையில்லை.*

*"ஜனாதிபதியின் இல்லத்துக்குப் 'பேப்பர்' போடும் பையன் யார் என்று நாம் தேடி வருகின்றோம். அந்தப் பையனைக் கடத்திவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். பத்திரிகையும் ஜனாதிபதிக்குக் கிடைக்காது. அதனால் அரசில் நடப்பதும் ஜனாதிபதிக்குத் தெரி யாமல் போய்விடும். அரசில் நடப் பது ஜனாதிபதிக்குத் தெரியாமல் போனால் அரசு தன்பாட்டிலேயே கவிழ்ந்து விடும். பேப்பர் பையனைக் கடத்தினால் எல்லாம் சரியாகிவிடும்"* – என்று எகத்தாளமான சிரிப்புடன் நையாண்டி பண்ணி அந்தத் தமிழ்ப் பத்திரிகையாளருடன் உரையாடினார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தன்னுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளா அல்லது ஆறு ஆண்டுகளா என உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் – வியாக்கியானம் – கோரி மூக்குடைபட்டுப் போயிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

இப்படி அவர் உயர் நீதிமன்றைக் கோரியமையால், அவர் பதவியாசை பிடித்தவர் என்ற எண்ணப்பாடு தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்ற தகவல் புலனாய்வுத் தரப்புகள் மூலம் அவருக்குத் தெரியப் படுத்தப்பட்டுள்ளதாம்.

இதனால், இவ்வாறு உயர்நீதிமன்றத்திடம் வியாக்கியானம் கோரி, மேலும் ஒரு வருடகால ஆட்சியை உறுதி செய்யுங்கள் என்று தமக்கு ஆலோசனை கூறிய தரப்புகள் மீது ஜனாதிபதி மைத்திரிபால மிகவும் சலிப்புற்றிருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

*"நேரத்துடன் தேர்தல் நடத்துங்கள் என்று ஆலோசனை கூறி மஹிந்த ராஜபக்ஷவைக் கவிழ்த்தவர்கள் ஆலோசகர்கள் தாம். அதுபோலத்தான் எனக்கும் சில ஆலோசகர்கள் வாய்த்திருக்கின்றார்கள். அவர்களை முதலில் மாற்ற வேண்டும்."* – என்ற சாரப்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு சோதிடம் பார்த்த ஒருவரும் சேர்ந்துதான் நேரத்துடன் தேர் தலை நடத்துவதற்கு நாள் குறித்துக் கொடுத்து அவரைக் கவிழ்த்தார்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிக்கு அப்படியில்லை. அவரது சோதிடர், உயர்நீதிமன்றத்தின் அப்படி வியாக்கியானம் கோர வேண்டாம் என்று ஆலோசனை கூறினாராம்.

மத்திய மாகாண ஆளுநராக இருப்பவர் நிலுகா எக்க நாயக்கா. ஆண் நிலையிலிருந்து பெண்ணாக மாறிய – பாலின மாறுபாடு செய்து கொண்ட – இலங்கையின் முதல் ஆளுநர் இவர் என்று 'விக்கிபீடியா' கூறுகின்றது.

இந்த அம்மணிதான் ஜனாதிபதி மைத்திரிபாலாவின் நம்பிக்கைக்குரிய சோதிடர் எனக் கூறப்படுகின்றது.

அவரது ஆலோசனையையும் மீறி உயர்நீதிமன்றிடம் வியாக்கியானம் கோரி இப்போது மூக்குடைபட்டுப் போயிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்காக வருந்துகின்றார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

தமது சோதிடரின் ஆலோசனையைக் கேட்டதால் தேர்தலை முற்கூட்டியே நடத்தித் தோற்றுப் போய் அதற்காகக் கவலைப்படுகின்றார் மஹிந்தர்!

தமது சோதிட அம்மணியின் ஆலோசனையைக் கேட்காமல் போய் விட்டோமே என்று மனம் நொந்து கொள்கின்றார் மைத்திரி! - மின்னல் -

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றபோதே ஐரோப்பிய ஒன்றியத்தரப்பினர் தமது எதிர்பார்ப்பை இப்படித் தெளிவுபடுத்தியுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விடயத்தில் விரைவாக தீர்வைப் பெற்றுத் தருவது தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனைத் தவிர, அடிப்படைச் சட்டப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக குற்றவியல் நடைமுறைக் கோவையைத் திருத்தியமைக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி மற்றும் 2017 மார்ச் 23 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவதில் காணப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் இருதரப்பினரும் ஆராய்ந்தனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எஞ்சியுள்ள பொறிமுறைகளான உண்மையைக் கண்டறிதல், நல்லிணக்கம், இழப்பீடு மற்றும் நீதி தொடர்பிலான பொறிமுறைகளை நிறுவுவது சம்பந்தமாக தனது அர்ப்பணிப்பை இலங்கை இதன்போது மீள உறுதிப்படுத்தியதாகவும், துரித மான நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக ஐரோப்பிய வெளியக நடவடிக்கைச் சேவையின் ஆசிய, பசுபிக் வலயத்திற்கு பொறுப்பான பிரதி நிர்வாகப் பணிப்பாளர் பவோலா பம்பலோனியும், இலங்கை சார்பாக வெளிவிவகார செயலாளர் பிரசாத் காரியவசமும் இந்த சந்திப்பின் போது இணைத் தலைவர்களாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருட இறுதியில் பிரசல்ஸில் நடைபெறவுள்ள அடுத்த சந்திப்பிற்கு முன்பாக தொடர்ச்சியான அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இ.போ.சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இரண்டு பஸ் நடத்துநர்களையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்துக்கு வரவழைக்கப்பட்டதையடுத்து நிலைமை சுமுகமானது.

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமாறுகால நீதி தொடர்பாக 2015 இல் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில், தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை சிறிதளவு முன்னேற்றத்தையே காட்டியிருப்பதாகக் கண்காணிப்பகத்தின் தென்னாசிய வட்டகைக்கான இயக்குநர் மீனாட்சி கங்குலி இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசு தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவு செய்யவில்லை என்பது தொடர்பான பல விடயங்களை அவர் இந்த அறிக்கையில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். (உ)

## கலைப்பீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் மூன்றாம், நான்காம் வருட மாணவர்களிற்கிடையில் இடம்பெற்ற மோதலில் மூன்று மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில், இந்த இரண்டு வருட வகுப்புகளும் நேற்றுமுன்தினம் வரை பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த மோதலில் சம்பந்தப்பட்ட ஏழு மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான வகுப்புத்தடைகள் நேற்று முதல் நீக்கப்படுவதாக நேற்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்று கலைப்பீடத்தின் மூன்றாம், நான்காம் வருட வகுப்புகளுக்கான விரிவுரையாளர்கள் சென்றிருந்தபோதிலும், மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை.

இவ்விடயத்தில் இருதரப்பு மாணவர்களிடமும் பேசி தீர்வொன்றை எட்டுவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வர் எனப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கடிதம் ஒன்றின் மூலம் தமக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர் எனப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டார்.

## பிணைமுறியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையிலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தித் திருடர்களுக்குத் தண்டனை வழங்கவும் திருடப்பட்ட மக்கள் பணத்தை மீண்டும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்குத் தேவையான அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகளை இப்போது ஆரம்பித்துள்ளேன். மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்ப அந்த நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்து நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய வங்கி மோசடி தொடர்பாக நான் நியமித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பக்கசார்பின்றி சுயாதீனமாகவும் நேர்மையாகவும் நீதிமன்றம் மற்றும் சட்ட ஆட்சியை மதித்தும் செயற்பட்டிருக்கின்றது. அரசியல் விரோதிகள் எதனைக் கூறிய போதும், இந்த ஆணைக் குழுவே இந்நாட்டில் இதுவரையில் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களில் மிகவும் தூய்மையாகவும் வெற்றிகரமாகவும் செயற்பட்ட ஆணைக் குழுவாகும்.

இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி எதிர்கால நடவடிக்கைகளுக்கு மூன்று புதிய சட்டங்களை ஆக்கப்படும். மீண்டும் மத்திய வங்கியில் அத்தகைய ஊழல், மோசடி நடைபெறாதிருப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான புதிய சட்டங்களை ஆக்குதல், களவாடப்பட்ட மக்கள் பணத்தை உடனடியாக மீண்டும் பெற்றுக்கொள்ளுவதற்குத், தேவையான சட்டத்தை ஆக்குதல், எதிர்காலத்தில் மத்திய வங்கியில் இத்தகைய மோசடிகள் இடம் பொறாத வகையில் நிறுவனத்தை அமைப்பதற்கான சட்டதிட்டங்களை உருவாக்குதல் ஆகியவையே அவை. – என்றார் ஜனாதிபதி. (உ)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கே.தினேஷுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருபவை வருமாறு :–

நேற்றுமுன்தினம் இரவு ஏறாவூரில் இருந்து தம்பதிகள் இருவர் காரில் யாழ். நோக்கிச் சென்றபோது அவர்கள் பயணித்த கார் கொடிகாமம் – புத்தூர் சந்திக்கு அண்மையில் பழுதடைந்துள்ளது. காரில் வந்தவர்கள் சக்கரத்தை கழற்றி மற்றைய சக்கரத்தை பொருத்திக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களிடம் கைத்துப்பாக்கியைக் காண்பித்து மிரட் டியுள்ளனர்.

அத்துடன் அவர்களது உடைமையில் இருந்த 5 லட்சம் ரூபா பணம் மற்றும் 6 பவுண் நகை என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர். இதனையடுத்து அத் தம்பதிகள் கொடிகாமம் பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையிலும் கொள்ளையர்களின் அடையாளங்கள் தொடர்பாக அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் கொள்ளையில் ஈடுபட்ட இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கொடிகாமம் பகுதியில் வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட இந்த இருவரில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற கஞ்சாக்கடத்தல் தொடர்பில் தேடப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இருவரிடமும் தொடர்ச்சியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அதனைத் தொடர்ந்து அவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கொடிகாமம் பொலிஸ் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரஷ்ய றொசறொம் அரச கூட்டுத்தாபன பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்!

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ரஷ்ய றொசறொம் அரச கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் Russian State Corporation ROSATOM ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் றொசறொம் நிறுவனத்தின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் நிகொலாய் ஸ்பாஸ்கி உள்ளிட்ட ஐந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆய்வுத் துறையின் முன்னேற்றத்திற்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் மற்றும் மின்சக்தி, கைத்தொழில், விவசாயம் போன்ற பல துறைகளில் இருநாடுகளுக்கிடையில் கூட்டுறவை மேம்படுத்தும் நோக்குடன் இவர்கள் இலங்கை வந்துள்ளனர்.

மின்சக்தி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆய்வு அமைச்சுகளுடன் இணைந்து இதற்காக நீண்டகால, குறுங்கால நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்துவரும் உறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ரஷ்யா இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கிவரும் உதவிகளைப் பாராட்டினார்.

குறிப்பாக, அண்மையில் தேயிலை ஏற்றுமதி தொடர்பில் எழுந்த பிரச்சினையை உடனடியாக தீர்த்து இலங்கை நாட்டிற்கும் மக்களுக்கும் வழங்கிய இதய பூர்வமான ஒத்துழைப்பு குறித்து ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புட்டினிக்கு ஜனாதிபதி தனது விசேட நன்றியைத் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மெடரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதியின் மகனின் பிறந்த நாள் மனநலம் குன்றிய குழந்தைகளுடன்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன நேற்றுமுன்தினம் தனது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார்.

பொதுவாக ஜனாதிபதி அல்லது அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நட்சத்திர ஹோட்டல்கள் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்று பிறந்த நாள் கொண்டாடுவதையே வழக்கமாக்கி கொண்டுள்ளனர்.

எனினும், ஜனாதிபதி மைத்திரியின் மகன் அனைவருக்கும் ஓர் உதாரணத்தைக் கற்பிக்கும் வகையில் தனது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.

அதற்மைய மீரிகமவில் அமைந்துள்ள மன நலம் குன்றிய குழந்தை பராமரிப்பு மற்றும் தொழிற்பயிற்சி மையத்தில் தனது பிறந்த நாள் கொண்டாட்டங்களை தஹாம் மேற்கொண்டுள்ளார்.



அங்குள்ள பிள்ளைகளுக்குத் தேவையான பாடசாலை கற்றல் உபகரணங்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் தஹாம் சிறிசேனவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கன் நிறுவனத்திற்கு புதிய பணிப்பாளர் சபை!

எதிர்வரும் தினங்களுக்குள் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்படும் என அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹஷீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை எந்தக்கட்டத்திலும் விற்கப் போவதில்லை எனவும் அதன் தரம் குறைவதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலிருந்து விலகும் உறுப்பினர்களின் இராஜினாமா கடிதங்களை பெற்றுக்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார் என்றும் அமைச்சர் கபீர் ஹஷீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# இறக்குவானை தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக உபாலி சந்திரசேன!



கொழும்பு, ஜன. 19

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் இறக்குவானை தேர்தல் தொகுதியின் தலைமை அமைப்பாளராக உபாலி சந்திரசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், இந்த தொகுதியின் தலைமை அமைப்பாளராக இருந்த ரஞ்சித் சொய்ஸா இந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சிகளில் இலங்கை கணிசமான முன்னேற்றம்!

கொழும்பு, ஜன.19

சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்தும் முயற்சிகளில் இலங்கை கணிசமான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளதென சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சந்திரானி சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின்சிறுவர் உரிமை தொடர்பான சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு இலங்கையின் இளம் தலைமுறைக்கு சர்வதேசதரத்திலான பாதுகாப்பை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கை சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் விவகாரத்தில் முன்னேற்றகரமான அரச கொள்கைகளை தொடர்ந்தும் அனுசரித்து வருகிறது.

இவற்றில் சிறுவர்களுக்கும் இலவச சுகாதார வசதிகளை வழங்குவதும் உள்ளடங்கும். இதன் காரணமாக பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்று திருமதி சேனாரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைப்பிரிவுத் தலைமையகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த பொதுமக்களிற்கான வைத்தியமுகாம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதனை யாழ்.பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி,வைத்தியர் எம்.எச்.எம்.ஹபீல் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இதனை ஒட்டிய நிகழ்வில் பிரதம அதிதிகளாக அவர்கள் இருவரும் மற்றும் 52ஆவது டிவிஷன் படைப்பிரிவின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அருண வன்னியாராச்சி மற்றும் 523ஆவது பிரிக்கேட் படைப்பிரிவின் தளபதி ரிகிரி திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் 300 பேர் வரையான நோயாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.








கல்வியியலாளர் கலாநிதி ஜோன் மனோகரன் கெனடி விஜயரத்தினத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுக் காலை அவரது காரைநகர் நீலிப்பந்தனை இல்லத்தில் நடைபெற்றன. அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அஞ்சலி செலுத்துகின்றமையையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந் திரகுமார் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துகின்றமையையும் படங்களில் காணலாம்.

# மு.காவின் எம்.பி. இராஜினாமா



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும்ஐக்கியதேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். ஸல்மான் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க திஸாநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையிலான தேர்தல் உடன்படிக்கையின் அடிப்படையில், ஐ. தே. கட்சியினால் இரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற இடங்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# மேர்வினின் மகனை கைது செய்யுமாறு நீதிமன்று கட்டளை

முன்னாள் அமைச்சர் மேர்வின்சில்வாவின்புதல்வர் மாலக சில்வாவை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் தர்ஷிகா விமலசிறி உத்தரவிட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொழும்பிலுள்ள இரவு விடுதியொன்றில் பிரித்தானிய பிரஜைஒருவருடன்ஏற்பட்ட பிரச்சினை சம்பந்தமான வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காததன் காரணமாகவே அவரைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பாலியல் இலஞ்சம் கோரிய கணினி திருத்துநர் சிக்கினார்

கொழும்பு பிரதேசத்தில் திருத்தம் ஒன்றை மேற்கொள்ள தனது கணினியை ஒப்படைத்த மாணவி ஒருவரின் புகைப்படங்களை அக்கணினியிலிருந்து பெற்று, அதனை இணையத்தளத்தில் பதிவேற்றுவதாக அச்சுறுத்தி, அந்த மாணவியிடம் பாலியல் இலஞ்சம் பெற முயற்சித்தார் எனக் கூறப்படும் கணினி, தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜகிரிய – கொஸ்வத்த பகுதியை சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கைது செய்யப்பட்ட வேளையில் அவரிடமிருந்த கணினி தரவு செயலாக்க அலகு மற்றும் கைத்தொலைபேசி ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# உதயங்க வீரதுங்கவுக்கு ரூ.9 கோடி 40 லட்சம் சொத்து

இலங்கையின் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு 9 கோடி 40 லட்சம் பெறுமதியான சொத்துக்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட சோதனைகளின் பின்னர் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது எட்டு வங்கிக்கணக்குகளைப் பரிசோதனை செய்த பின்னர் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மிக் விமானக் கொடுக்கல் வாங்கல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் துணைவியாரான ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# ‘ரஸஞானி’ ஆவணப் படம் பருத்தித்துறையில் காட்சி

எழுத்தாளரும் ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி பற்றிய ‘ரஸஞானி’ என்ற ஆவணப்படம் பருத்தித்துறை, வீ. எம். வீதியில் அமைந்துள்ள ஞானாலயா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திரையிடப்படவுள்ளது. படக்காட்சியைத் தொடர்ந்து உரையாடலும் இடம்பெறும். இந்த நிகழ்விற் கலந்து கொள்வதற்காக இந்தப் படத்தை இயக்கிய மறுவளம் எஸ். கிருஷ்ணமூர்த்தி வருகை தந்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் முருகபூபதி நீண்டகாலமாக வீரகேசரி பத்திரிகையில் பணியாற்றியவர். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலக்கியத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். முருகபூபதியின் எழுத்துகள் 25 புத்தகங்களுக்கு மேல் பிரசுரவடிவம் பெற்றுள்ளன. இவற்றைத்தவிர, நூற்றுக்கணக்கான பதிவுகளையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கும் முருகபூபதி, சமூகச் செயற்பாடுகளிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகிறார்.

இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்ற அமைப்பை நண்பர்களுடன் இணைந்து உருவாக்கி, அதன் மூலம் பல ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவிகளை மேற்கொள்கிறார்.

பயணம், எழுத்து, சமூகச் செயற்பாடுகள் என்று ஓய்வேயில்லாமல் இயங்கும் மனிதர் முருகபூபதி. தினம் ஒரு பதிவோ கட்டுரையோ இலக்கியமோ எழுதுவது என்பது அவருடைய வழக்கம். எந்த நாளும் பூபதியின் எழுத்துகளை எங்காவது ஓர் இணையத் தளத்தில் அல்லது பத்திரிகையில் நாம் படிக்கலாம். இவ்வளவுக்கும் இது முருகபூபதியின் வாழ்க்கையையும் பணிகளையும் எடுத்துச் சொல்லும் வாழும் ஆவணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.